Postal Reg.No. GDP-39/2017-2019

بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 2

வருடாந்திர சந்தா ரூபாய் 300/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 27

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

11 ஷவ்வால் 1438 ஹிஜ்ரி கமரி 6 வஃபா 1396 ஹிஜ்ரி ஷம்ஸி

6 ஜூலை 2017

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்து –லில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவல –னாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எவர்கள் இறைவனுக்காகத் தங்களது மனயிச்சைகளோடு போர் புரிவார்களோ அவர்கள் அருளுக்குரியவர்கள். இதற்கு மாறாக எவர்கள் தங்களது மனயிச்சைகளுக்காக இறைவனோடு போர் புரிவார்களோ, அவனோடு இணங்கி செயல்பட மாட்டார்களோ அவர்கள் பாக்கியம் கெட்டவர்களாவர்.**

---

**இறைவனது போதனைக்கும் குர்ஆனின் நேர்வழிக்கும் மாறாக ஓர் அடி கூட எடுத்து வைக்க முற்படாதீர்கள். எவர் திருக்குர்ஆனின் எழுநூறு கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையையாவது மீறுவாரோ அவர் இரட்சிப்பின் வாசலைத் தனது கரங்களால் தானே அடைத்துக் கொள்கிறார் என்பதனை நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகின்றேன்.**

# வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

எவர்கள் இறைவனுக்காகத் தங்களது மனயிச்சைகளோடு போர் புரிவார்களோ அவர்கள் அருளுக்குரியவர்கள். இதற்கு மாறாக எவர்கள் தங்களது மனயிச்சைகளுக்காக இறைவனோடு போர் புரிவார்களோ, அவனோடு இணங்கி செயல்பட மாட்டார்களோ அவர்கள் பாக்கியம் கெட்டவர்களாவர். எவர் தனது இச்சைக்காக இறைவனது கட்டளையை மீறுவாரோ அவர் ஒருபோதும் வானத்தில் நுழைய மாட்டார். ஆகவே திருக்குர்ஆனின் ஒரு புள்ளியோ, எழுத்தோ உங்களுக்கு விரோதமாய் சாட்சியம் கூறாமலும் அதன் காரணமாக நீங்கள் பிடிபடாமலிருக்கவும் முயலுங்கள். ஏனெனில் சிறு கெடுதியும் கூட தண்டனைக்குரியதாகும். வாழ்நாட்கள் மிகக் குறைவானவையாய் இருக்கின்றன. ஆனால் கடமைகளோ மிக அதிகமாயிருக்கின்றன. மாலைப்பொழுது நெருங்கிக் கொண்டிருப்பதை முன்வைத்து கடமைகளை நிறைவேற்றுவதில் விரைவுடன் செயல்படுங்கள். இறைவன் முன்பு எவற்றையெல்லாம் சமர்ப்பிக்க வேண்டியதிருக்கின்றனவோ அவற்றில் எவையேனும் விடுபட்டு நஷ்டம் உண்டாவதற்குக் காரணமாகாமல் இருக்க அவற்றைத் திரும்பத் திரும்ப கவனித்து வாருங்கள். அரசவையில் சமர்ப்பிப்பதற்கு தகுதியற்ற குறைகள் நிரம்பிய போலிப் பொருட்களை நீங்கள் எடுத்துச் செல்லக் கூடியவர்களாக ஆகிவிடக் கூடாது. ஆதலால் மிகக் கவனமாய் இருங்கள். இறைவனது போதனைக்கும் குர்ஆனின் நேர்வழிக்கும் மாறாக ஓர் அடி கூட எடுத்து வைக்க முற்படாதீர்கள்.

எவர் திருக்குர்ஆனின் எழுநூறு கட்டளைகளில் ஒரு சிறிய கட்டளையையாவது மீறுவாரோ அவர் இரட்சிப்பின் வாசலைத் தனது கரங்களால் தன் மீதே அடைத்துக் கொள்கிறார் என்பதனை நான் உங்களுக்கு உண்மையாகவே கூறுகிறேன். உண்மையானதும் முழுமையானதுமான இரட்சிப்புக்குரிய வழிகளை திருக்குர்ஆனே நமக்குத் திறந்து தந்திருக்கிறது. எஞ்சியிருப்பவை அனைத்தும் அதன் நிழல்களாகும். ஆகவே நீங்கள் திருக்குர்ஆனை மிகவும் கருத்தூன்றிப் படியுங்கள். அதனை மிகவும் மேலாக நேசியுங்கள். வேறெதனோடும் வைக்காத பற்றை அதனோடு வையுங்கள். ஏனெனில் இறைவன் என்னை நோக்கி 'அல்கைரு குல்லுஹூ ஃபில் குர்ஆன்' என்று கூறியுள்ளான். அதாவது எல்லா விதமான நன்மைகளும் குர்ஆனில் உள்ளன.

உண்மையும் இதுவேயாகும். திருக்குர்ஆனைக் காட்டிலும் மற்றவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கும் மக்களைக் குறித்து நான் பரிதாபம் கொள்கிறேன். உங்களின் எல்லா விதமான வெற்றிகளுக்கும் இரட்சிப்பிற்கும் ஊற்றின் உறைவிடம் குர்ஆனில் உள்ளது. திருக்குர்ஆனில் காணப்படாத உங்களது எந்த மார்க்கத் தேவையுமில்லை. இறுதி நாளில் உங்களது நம்பிக்கை பொய்யானதா, உண்மையானதா எனப் பிரித்துக் காட்டக் கூடிய நூல் குர்ஆனேயாகும். குர்ஆன் மூலமாக அல்லாமல் உங்களுக்கு நேர்வழி காட்டக் கூடிய நூல் வானத்தின் கீழ் வேறொன்றும் இல்லை. திருக்குர்ஆனை உங்களுக்கு அருளியிருப்பதன் மூலம் மாபெரும் அருட்கொடையை இறைவன் உங்களுக்காக அளித்திருக்கின்றான். உங்களுக்காக அருளப்பட்டிருக்கின்ற இவ்வேதம் கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் நிச்சயமாக அவர்கள் வழிதவறியிருக்க மாட்டார்கள். உங்களுக்கு அருளப்பட்ட இந்த அருட்கொடையும், நேர்வழியும் தவ்ராத்திற்குப் பதிலாக யூதர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்களில் சில பிரிவினர் இறுதி நாளை மறுத்திருக்க மாட்டார்கள் என்று நான் உண்மையாக கூறுகிறேன். எனவே உங்களுக்கு அருளப்பட்ட இந்த அருட்கொடைக்கு மதிப்பளியுங்கள். இது மிகவும் அன்பார்ந்த அருட்கொடையும் கிடைப்பதற்கரிய செல்வமும் ஆகும். திருக்குர்ஆன் அருளப்படாதிருந்தால் முழு உலகமும் அசுத்தமான இழிந்த பொருளாக ஆகியிருக்கும். குர்ஆன் எவ்வாறான சிறந்த நூல் என்றால் அதன் முன் ஏனைய எல்லா வழிகாட்டல்களும் பொருளற்றவையாகும்.

ஒரு மனிதன் திருக்குர்ஆனின் வெளிப்படையான சொற்களையும் அவற்றின் பொருள்களையும் விட்டு விடாமல், மறுக்காமல் அவற்றிற்கேற்ப செயல்பட்டு வந்தால் அவனை அந்த திருக்குர்ஆன் ஒரே வாரத்தில் தூய்மையானவனாக்கி விடும். நீங்கள் திருக்குர்ஆனை விட்டும் விலகி ஓடாமலிருந்தால் அது உங்களை இறைத் தூதர்களைப் போன்று ஆக்க முடியும். திருக்குர்ஆனைத் தவிர வேறு எந்த நூலாவது அதனைப் படிப்பவர்களுக்கு ஆரம்பத்திலேயே இவ்வாறான துஆவை கற்றுக் கொடுத்திருக்கின்றதா ? மேலும் இந்த நம்பிக்கையை வேறெந்த வேதமாவது உங்களுக்கு அளித்துள்ளதா ? 'இஹ்தினஸ்ஸிராத்தல் முஸ்தகீம். ஸிராத்தல்லதீன அன்அம்த அலைஹிம்' அதாவது, இறைவா ! நீ எங்களுக்கு முன்னுள்ள நபி, ரஸூல், ஸித்தீக், ஸாலிஹ் ஆகியவர்களுக்கு காண்பித்துக் கொடுத்த உனது அருட்கொடையின் வழிகளை எங்களுக்கும் காண்பித்தும் கொடுத்தருள் வாயாக. *(1:6-9)*

ஆகவே நீங்கள் உங்களின் தைரியத்தையும் உறுதியையும் கைவிட்டு விடாமல் முன்னேறுங்கள். திருக்குர்ஆனின் அழைப்பை நீங்கள் ஒருபோதும் ஏற்க மறுக்காதீர்கள். அது உங்களின் முன்னோர்களுக்கு அருளப்பட்ட அருட்கொடையை உங்களுக்கு அளிக்க விரும்புகின்றது. இறைவனது வஹி, இல்ஹாம் (வெளிப்பாடு), இறைவனோடு உரையாடுதல் போன்ற அருட்கொடைகளிலிருந்தும் இறைவன் உங்களை ஒருபோதும் விலக்கி வைக்க மாட்டான். மாறாக உங்கள் முன்னோர்களுக்கு அருளப்பட்ட எல்லா அருட்கொடைகளையும் உங்களுக்கு அவன் முழுமைப்படுத்துவான்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

முஸ்லிம் ஆலிம்களின் தவறான கொள்கை, திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆழிய போதனைகளைச் சரிவர புரியாததன் விளைவாகவும், மேலோட்டமான விரிவுரைகள் மற்றும் விளக்கங்கள் கொடுத்ததன் விளைவாகவும் கிலாஃபத் எனும் அமைப்பு எவ்வாறு நிலைபெறும்? என்ற கருத்தை முஸ்லிம்களில் பெரும்பாலார் புரிவதில்லை. இந்த கிலாஃபத்தின் அவசியமும் இல்லை என்று கூறக்கூடிய ஒரு பெரும் கூட்டம் முஸ்லிம்களில் உள்ளது. மேலும் எவரெவர் எந்தெந்த பிரிவுகளில் தொடர்பு வைத்துள்ளாரோ அவரவர் அந்தப் பிரிவுகளிலேயே நிலைபெற்றிருக்கலாம். அதுவே போதுமானது என்றும் அக்கூட்டம் கூறுகின்றது. அவர்களைப் பொருத்த வரையில் முஸ்லிம் சமுதாயத்தின் விரிவான பலன்கள் மற்றும் முஸ்லிம் சமுதாயம் ஒரு தலைமையின் கீழ் ஒன்றிணைவதை விட தனித்துவமும், பிரிவினைகளுமே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதே அவர்களின் நிலையாகும்.

இன்னும் சிலர் உள்ளனர். அவர்கள் தமது உலகியல் ஆட்சி அதிகாரத்தின் மூலமாக தமது கிலாஃபத்தை உருவாக்க முயற்சி செய்கின்றனர். கிலாஃபத்தை ஆட்சி, அதிகாரத்தின் மூலமாக நிலைநாட்ட முடியும் என்பது அவர்களின் எண்ணமாக உள்ளது. பொதுவான முஸ்லிம்களின் தவறான கருத்துக்களால், இஸ்லாத்தின் எதிர் சக்திகள் இஸ்லாமிய உலகை பலவீனப்படுத்துவதற்காக இத்தகைய அமைப்புகளை உருவாக்குதில் தமது பங்களிப்பை வழங்கின. அத்தகைய அமைப்புகள் தம்மை கிலாஃபத்தின் பெயரால் தொடர்புபடுத்திக் கொண்டன. அவை சிறிது காலம் வரை தமது உலகியல் நோக்கங்களைப் பெற்று வந்தன. தமது உலகியல் எஜமானர்களின் உதவி கிடைக்காமல் போன பிறகு அல்லது அவர்களின் நோக்கம் முழுமை பெறாதபோது அவை தற்போது அழிந்து கொண்டிருக்கின்றன.

கடந்த நாட்களில் இங்கு யூ.கே மான்செஸ்டரில் தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்றது. காரணமே இன்றி 22, 23 அப்பாவி மனிதர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அதில் அப்பாவி குழந்தைகளும் அடங்குவர். இது மிகவும் அக்கிரமமான செயலாகும். எந்த நிலையிலும் இதனை இஸ்லாமிய போதனைகளுடன் தொடர்புடையதாகக் கூறவே முடியாது. இதுபோன்ற அநியாயமான சம்பவங்களைக் கண்டு நாம் நிம்மதியிழந்து விடுகிறோம். அல்லாஹ் அதில் இறந்தவர்கள் மீது கருணை காட்டுவானாக. அவர்களின் உறவினர்களுக்கும் பொறுமையை வழங்குவானாக. இந்த அநீதியாளர்களின் கரங்களையும் இறைவன் தடுத்து நிறுத்துவானாக. அவர்கள் இஸ்லாம் மற்றும் கிலாஃபத்தின் பெயரால் இதுபோன்ற செயல்களை செய்கின்றனர்.

கிலாஃபத் உலகியல் அதிகாரங்களினாலோ உலகியல் தந்திரங்களினாலோ கிடைக்க முடியாது. பெயர்தாங்கி ஆலிம்கள் ஒன்று திரண்டு தீர்மானங்களை நிறைவேற்றுவதினாலோ முஸ்லிம்கள் ஒன்று கூடி தங்களது கலீஃபாவை தேர்ந்தெடுப்பதாலோ கிலாஃபத் கிடைத்து விடாது.

கிலாஃபத் எனும் அமைப்பு அச்சத்தை அமைதியில் மாற்றும் அமைப்பாகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவாறு மார்க்கத்தின் உறுதிப்பாட்டிற்குக் காரணியாகத் திகழக் கூடியதாகும். அதன் தொடர்பு அல்லாஹ் மற்றும் அவனது தூதர் கற்றுத் தந்த வழிமுறைகளினால் நிலைநாட்டப்படும் கிலாஃபத்தோடு உள்ளது. அதனைப் பற்றி திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறி விட்டான். அது சூரா ஜுமுஆவில், وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ இதுவரை சந்தித்திராத மற்றொரு சமுதாயத்திடமும் அவன் அவரை அனுப்புவான் என வசனத்தில் வருகின்றது. (62:4)

இன்று உலகில் ஈமானை நிலைநாட்டுவதற்கான முயற்சியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டரின் மூலமாக நிலைநாட்டப்பட்டுள்ள அமைப்பைத் தவிர்த்து வேறெவர் செய்கின்றார்? அமைதி, நேசம் மற்றும் அன்பின் தூதுச் செய்தியுடன் இஸ்லாத்தின் போதனைகளை அந்த அமைப்பு உலகில் பரப்பி வருகிறது. உள்ளங்களில் ஈமானை நிலைநாட்ட அது முயற்சி செய்கின்றது. நிராகரிப்பு மற்றும் மார்க்கமற்றத் தன்மை என்ற இந்தக் காலகட்டத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தின் பணி இதுவேயாகும். இந்தப் பணியையே நாம் செய்ய வேண்டும். அதனை நாம் செய்தும் வருகிறோம்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்த வாக்குறுதிக்கேற்பவே அன்னாருக்குப் பிறகு இரண்டாம் வல்லமை என்ற கிலாஃபத் மூலமாக அன்னாரின் வருகையின் நோக்கத்தை முழுமை செய்வான். மீண்டும் அல்லாஹ் வெற்றியை வழங்குவான். நம்பிக்கையாளர்களின் அமைதிக்கான ஏற்பாட்டையும் அல்லாஹ் செய்வான்.

கஷ்டங்களும் வரும்; துன்பங்களும் வரும். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கே இறுதி வெற்றி கிடைக்கும் - இன்ஷா அல்லாஹ். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக நிலைநாட்டப்பட்டுள்ள அமைப்புடன் மட்டுமே முன்னேற்றங்கள் தொடர்புடையவையாக இருக்கின்றன. உலகின் அமைதியும் கூட அதனையே சார்ந்துள்ளது.

தற்காலிக தடைகள் ஏற்பட்டாலும் கூட இஸ்லாத்தின் வெற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவும் அன்னாருக்கு பிறகு நிலைநாட்டப்பட்ட கிலாஃபத்தின் மூலமாகவும் நடைபெறும். எதிரிகள் என்ன அழுத்தம் கொடுக்க விரும்புகின்றார்களோ கொடுக்கட்டும். ஆனால் அவர்களுக்கு தோல்வியும், இழிவுமே விதிக்கப்பட்டுள்ளது.

யூ.கே வைச் சார்ந்த மதிப்பிற்குரிய சவுத்ரி முஹம்மது சுலைமான் அஹ்தர் சாஹிப் அவர்களின் மகனான மதிப்பிற்குரிய சவுத்ரி ஹமீது அஹ்மது சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா ஹாஸிர் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**26 மே 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **26 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِي الْأَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ ۖ وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِي ارْتَضٰى لَهُمْ وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْ بَعْدِ خَوْفِهِمْ أَمْنًا ۚ يَعْبُدُوْنَنِيْ لَا يُشْرِكُوْنَ بِيْ شَيْئًا ۚ وَمَنْ كَفَرَ بَعْدَ ذٰلِكَ فَأُولٰٓئِكَ هُمُ الْفٰسِقُوْنَ ۝

உங்களில் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்று –பவர்களை அல்லாஹ் நிச்சயமாக பூமியில் கலீஃபாவாக ஆக்குவான் என வாக்குறுதி அளிக்கிறான். எவ்வாறு அவர்களின் முன்னோர்களை கலீஃபாவாக ஆக்கினானோ அதுபோன்று உங்களையும் ஆக்குவான். அவன் அவர்களுக்காக விரும்பிய மார்க்கத்தை நிச்சயமாக அவர்களுக்கு உறுதிப்படுத்துவான். மேலும் அவர்களின் அச்சத்தின் நிலைக்குப் பிறகு நிச்சயமாக அவர்களின் நிலையை அமைதியில் மாற்றி விடுவான். அவர்கள் என்னையே வணங்குவார்கள். எனக்கு எவரையும் இணையாக்க மாட்டார்கள். இதன் பிறகும் நன்றிகேடு காட்டுபவர்களே கட்டுப்படாதவர்களாவர். **(24:56)**

இந்த வசனத்தின் கருத்திலிருந்து தெளிவாகுவது போன்று இந்த வசனமானது இஸ்லாத்தில் கிலாஃபத் நிலைபெற்றிருக்கும் என முஸ்லிம்களிடம் அல்லாஹ் செய்த வாக்குறுதியை எடுத்துரைக்கின்றது. ஆயினும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கிணங்க முஸ்லிம்களின் ஈமான் மற்றும் செயல்களில் ஏற்பட்ட குறைபாட்டின் காரணமாக இந்த அருட்கொடை குறிப்பிட்ட காலக்கட்டத்திற்கு அவர்களிடமிருந்து பறிக்கப்படும். ஆனால் அத்துடன் வசனம் கூறுவது என்னவென்றால், அல்லாஹ்வின் வாக்குறுதிக்கேற்ப உறுதியான ஈமான் கொண்ட மற்றும் நற்செயல்களை மேற்கொண்டு அல்லாஹ்வின் இந்த இறுதி மற்றும் முழுமையான மார்க்கத்தின் வழிநடப்பவர்களிடம் இந்த அமைப்பு மீண்டும் நிலைநாட்டப்படும். நபித்துவ வழியிலான கிலாஃபத் உலகில் மீண்டும் நிலைநாட்டப்

–பட்டு அது தொடரும். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 6 பக்கம் 285, ஹதீஸ் 18596. முஸ்னது நு∴மான் பின் பஷீர். பைருத்திலுள்ள ஆலமுல் குதுப் அச்சகத்தில் 1998 -ல் அச்சிடப்பட்டது) முஸ்லிம் ஆலிம்களின் தவறான கொள்கை, திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஆழிய போதனைகளைச் சரிவர புரியாததன் விளைவாகவும், மேலோட்டமான விரிவுரைகள் மற்றும் விளக்கங்கள் கொடுத்ததன் விளைவாகவும் கிலாஃபத் எனும் அமைப்பு எவ்வாறு நிலைபெறும்? என்ற கருத்தை முஸ்லிம்களில் பெரும்பாலார் புரிவதில்லை. இந்த கிலாஃபத்தின் அவசியமும் இல்லை என்று கூறக்கூடிய ஒரு பெரும் கூட்டம் முஸ்லிம்களில் உள்ளது. மேலும் எவரெவர் எந்தெந்த பிரிவுகளில் தொடர்பு வைத்துள்ளாரோ அவரவர் அந்தப் பிரிவுகளிலேயே நிலைபெற்றிருக்கலாம். அதுவே போதுமானது என்றும் அக்கூட்டம் கூறுகின்றது. இன்று இஸ்லாத்தின் நிலையும், உலகில் இன்று இஸ்லாம் அவப்பெயருக்கு ஆளாகி விடுவதாலும், எவர் எப்படி இருக்கின்றாரோ அவர் அப்படிய இருந்து கொள்ளட்டும். இதுவே காலத்தின் தேட்டமாகும் எனவும் முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

ஒரு பள்ளிவாயிலின் இமாம் மற்றும் ஓர் அமைப்பை நடத்தி வரும் மவ்லவி சாஹிப் இருக்கின்றார். வெளிப்படையில் மார்க்க அறிவு படைத்தவர் ஆவார். மேற்கத்திய நாடுகளில்தான் வசிக்கின்றார். அஹ்மதிகளாகிய நம்மிடம் அவர் நல்ல தொடர்பும் வைத்துள்ளார். அஹ்மதிகளை தவறாகவும் கருதுவதில்லை. அவர் என்னிடம், நான் இஸ்லாத்தின் எந்தப் பிரிவுடன் தொடர்பு வைத்துள்ளானோ அதன் சான்றோர்கள், எவருடைய மார்க்கத்தையும் சீண்டாதீர்; உம்முடைய மார்க்கத்தை கைவிட்டு விடவும் செய்யாதீர் என்றே போதித்துள்ளனர் எனக் கூறினார்.

இதுபோன்ற கருத்து கொண்ட மக்கள் ஆலிம்கள் என அழைக்கப்படுகின்றனர். அவர்கள் தம்முடைய சீடர்களுக்கும், தன்னைப் பின்தொடர்பவர்களுக்கும் ஒரு கிலாஃபத்தின் கீழ் ஒன்றிணைவதற்கு எந்த அவசியமுமில்லை என்றே போதிப்பார்கள். அவர்களைப் பொருத்த வரையில் முஸ்லிம் சமுதாயத்தின் விரிவான பலன்கள் மற்றும் முஸ்லிம் சமுதாயம் ஒரு தலைமையின் கீழ் ஒன்றிணைவதை விட தனித்துவமும், பிரிவினைகளுமே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதே அவர்களின் நிலையாகும். எனவே திருக்குர்ஆனின் போதனையை புரியவில்லை என்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களைச் சீர்தூக்கிப் பார்க்கவில்லை என்றால் இப்படித்தான் நடக்கும்.

முஸ்லிம்களின், இன்னும் சொல்ல வேண்டும் என்றால் முஸ்லிம் ஆலிம்களின் குறைமதி மற்றும் அறிவீனத்தைப் பற்றிக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ

என்ற வசனத்தின் பொதுவான பொருளை சிலர் நிராகரித்தபடி கூறுகின்றனர். இங்கு مِنْكُمْ என்பது சஹாபாக்களுக்கு மட்டுமே பொருந்தும். கிலாஃபத்தே ராஷிதா அவர்களின் காலக்கட்டத்தோடு முடிந்து போய் விட்டது. சஹாபாக்களின் காலக்கட்டம் வரையே கிலாஃபத்தே ராஷிதா இருந்தது. இனி கியாமத் வரை இஸ்லாத்தில் அந்த கிலாஃபத்திற்கான அடையாளமும் இருக்காது என்பது அவர்களின் கருத்தாகும். ஆக, அவர்களைப் பொருத்தவரையில் கனவு மற்றும் கற்பனையைப் போன்று கிலாஃபத்தின் காலக்கட்டம் வெறும் 30 வருடங்கள் மட்டும்தான். அதன் பின்னர் இஸ்லாம் நிரந்தரமாக முற்றுப் பெறாத துர்பாக்கியத்தில் வீழ்ந்து விட்டது என்று அவர்கள் கருதுகின்றனர்.

ஆனால் இது நல்ல உள்ளம் படைத்த மனிதரின் கருத்தாக இருக்க முடியுமா? என நான் கேட்கிறேன். மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்தின் பரக்கத் மற்றும் அன்னாரின் கிலாஃபத் 1400 வருடங்கள் வரை சந்தேகத்திற்கிடமின்றி நிலைபெற்றது என அவர் கருதுகிறார். ஆனால் நபிமார்களில் சிறந்தவர் என எவர் அழைக்கப்படுகிறாரோ, எவரின் ஷரீஅத் கியாமத் நாள் வரையிலானதோ அத்தகைய தூதரின் பரக்கத் அவருடைய காலக்கட்டம் வரைதான் நிலைபெற்றிருந்தது என அவர் எண்ணுகிறார். குறிப்பிட்ட காலம் அவரின் பரக்கத்துகளின் காட்சிகள் அவரது ஆன்மீக கலீஃபாக்கள் மூலம் வெளிப்படுவதை இறைவன் விரும்பவில்லை என அவர்கள் எண்ணுகின்றனரா? இதுபோன்ற கருத்துக்களை செவிமடுத்து நமது உடல் நடுநடுங்கி விடுகிறது. ஆனால் வேதனை என்னவென்றால், இஸ்லாத்தின் பரக்கத்துகள் இனி தொடராது என்ற அவமரியாதையான சொற்களை தந்திரத்தோடும், வெட்கமற்றுக் கூறும் மக்கள் முஸ்லிம்கள் என அழைக்கப்படுகின்றனர். இஸ்லாத்தின் பரக்கத்துகள் முற்றுப்பெற்று நீண்ட காலம் ஆகி விட்டது எனவும் அவர்கள் கூறுகின்றனர். (ஷஹாததுல் குர்ஆன். ரூஹானீ கஸாயின் தொகுதி 6 பக்கம் 330)

மற்றோரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்: “வெறும் 30 வருடங்கள் மட்டுமே கிலாஃபத் நிலைபெறக் கூடியதாக இருந்திருந்தால் அதன் பிறகு நிலைபெறாது என்றால், இஸ்லாத்தின் ஆயுள் அவ்வளவுதான் என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு 30 வருடங்கள் மேலும் ஆயுளை நீட்டித்திருப்பதற்கு அல்லாஹ் வல்லமை படைத்தவன் ஆவான். 93 வயது என்பது அசாதாரண வாழ்நாள் அல்ல. அந்நிலையில் கிலாஃபத்தின் அவசியமே இருந்திருக்காது”. (ஷஹாததுல் குர்ஆன். ரூஹானீ கஸாயின் தொகுதி 6 பக்கம் 354) எனவே கிலாஃபத்தின் முக்கியத்துவத்தை அறியாத மக்களும் உள்ளனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அத்தகைய நபர்களின் நிலைகளை விரிவாக விளக்கியுள்ளார்கள். ஆனால் இன்னும் சிலர் உள்ளனர். அவர்கள் தமது உலகியல் ஆட்சி அதிகாரத்தின் மூலமாக தமது கிலாஃபத்தை உருவாக்க முயற்சி செய்கின்றனர். கிலாஃபத்தை ஆட்சி, அதிகாரத்தின் மூலமாக நிலைநாட்ட முடியும் என்பது அவர்களின் எண்ணமாக உள்ளது. கிலாஃபத்திற்கான வாக்குறுதி ஈமான் மற்றும் நற்செயல்களை நிபந்தனையாகக் கொண்டுள்ளது என்ற தூதுச் செய்தியை அம்மக்கள் புரிவதில்லை. அல்லாஹ்வின் உண்மையான அடியார்களாக இருப்பவர்களுடன் மட்டுமே இந்த வாக்குறுதி தொடர்புடையதாகும். பொதுவான முஸ்லிம்களின் தவறான கருத்துக்களால், இஸ்லாத்தின் எதிர் சக்திகள் இஸ்லாமிய உலகை பலவீனப்படுத்துவதற்காக இத்தகைய அமைப்புகளை உருவாக்குதில் தமது பங்களிப்பை வழங்கினர். அத்தகைய அமைப்புகள் தம்மை கிலாஃபத்தின் பெயரால் தொடர்புபடுத்திக் கொண்டன. அவை சிறிது காலம் வரை தமது உலகியல் நோக்கங்களைப் பெற்று வந்தன. தமது உலகியல் எஜமானர்களின் உதவி கிடைக்காமல் போன பிறகு அல்லது அவர்களின் நோக்கம் முழுமை பெறாதபோது அவை தற்போது அழிந்து கொண்டிருக்கின்றன.

மூன்று ஆண்டுகளுக்கு முன் அயர்லாந்தில் என்னிடம் ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார். இஸ்லாமிய உலகில் கிலாஃபத் எனும் அமைப்பு உருவாகியுள்ளதே? அதன் உண்மைத்துவம் என்ன? அது பரவுமா? உங்களுடைய கிலாஃபத்திற்கு அதனால் அபாயம் ஏதும் உள்ளதா? எனக் கேட்டார். அதற்கு நான், அது கிலாஃபத்தே கிடையாது. ஏற்கனவே, எவ்வாறு தீவிரவாத அமைப்புகள் செயல்படுகின்றனவோ, அதுபோல இதுவும் ஓர் அமைப்பு. மற்ற தீவிரவாத அமைப்புகளுக்கு என்ன முடிவு ஏற்பட்டுள்ளதோ அந்த முடிவே இந்த அமைப்பிற்கும் ஏற்படும் என நான் கூறினேன். அவர்களின் உலகியல் எஜமானர்கள் அவர்களிடம் மகிழ்ச்சியாக இருக்கும் வரை அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருப்பர். அவர்கள், அவர்களை விட்டு தமது கரங்களை விலக்கிக் கொள்ளும்போது இவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக பலவீனமடைந்து விடுவர். மார்க்கத்தை இந்த மக்கள் எங்ஙனம் உறுதிப்படுத்துவார்கள்? இவர்கள் என்ன அமைதியை நிலைநாட்ட முடியும்? ஆயினும் இஸ்லாமிய உலகின் அமைதியை இவர்கள் தவிடு பொடியாக்கியதை உலகம் கண்டது. இஸ்லாத்தின் எதிர்சக்திகள் இஸ்லாமிய உலகைப் பலவீனப்படுத்தும் திட்டத்தை இவர்கள் நிறைவேற்றிக் கொடுத்து விட்டார்கள்.

இதில் முஸ்லிம் அரசாங்கங்களின் தலைவர்களும் அடங்குவர். அவர்கள் தமது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள பொதுமக்களை கொன்று குவிக்கின்றனர். இப்போதுவரை அமைதியை நிலைநாட்டுவதற்குப் பகரமாக, முஸ்லிம் சக முஸ்லிமின் அச்சத்திற்குக் காரணியாகத் திகழ்கின்றார். முஸ்லிம் அல்லாத உலகின் அமைதியையும் இவர்களே நாசமாக்கி விடுகின்றனர். அதற்குக் காரணங்கள் என்னவாக இருந்தாலும், உலகில் அப்பாவிகளைக் கொலை செய்வதிலும், நாசத்தைப் பரப்புவதிலும் ஒரு முஸ்லிமின் பங்கு இருக்கின்றது என்பதை இஸ்லாத்தின் மீது அனுதாபம் கொண்ட ஒரு முஸ்லிம் காணும்போது அவரின் உள்ளம் வலிக்கும். அவருக்கு நிம்மதியின்மை ஏற்படும்.

கடந்த நாட்களில் இங்கு யூ.கே மான்செஸ்டரில் தீவிரவாதத் தாக்குதல் நடைபெற்றது. காரணமே இன்றி 22, 23 அப்பாவி மனிதர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அதில் அப்பாவி குழந்தைகளும் அடங்குவர். இது மிகவும் அக்கிரமமான செயலாகும். எந்த நிலையிலும் இதனை இஸ்லாமிய போதனைகளுடன் தொடர்புடையதாகக் கூறவே முடியாது. இதுபோன்ற அநியாயமான சம்பவங்களைக் கண்டு நாம் நிம்மதியிழந்து விடுகிறோம். அல்லாஹ் அதில் இறந்தவர்கள் மீது கருணை காட்டுவானாக. அவர்களின் உறவினர்களுக்கும் பொறுமையை வழங்குவானாக. இந்த அநீதியாளர்களின் கரங்களையும் இறைவன் தடுத்து நிறுத்துவானாக. அவர்கள் இஸ்லாம் மற்றும் கிலாஃபத்தின் பெயரால் இதுபோன்ற செயல்களை செய்கின்றனர். இதேபோன்று உலகின் முஸ்லிம் நாடுகளிலும் கொலை சம்பவங்களும், அநீதிகளும், காட்டுமிராண்டித்தனமும் அதிகரித்து வருகின்றது. இவை அனைத்தும் மார்க்கத்தை விட்டு தூர விலகிச் சென்றது மற்றும் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்காததின் விளைவாகும். இஸ்லாமிய போதனைக்கு எதிராக நிகழும் இந்த செயல் இஸ்லாத்தின் பெயரால் நடக்கும் அநீதிகள் மற்றும் அந்நிய சக்திகளின் உதவியோடு முஸ்லிம் நாடுகள் தமது சொந்த மக்களின் மீது குண்டுகளை வீசி எந்த வித்தியாசமுமின்றி அப்பாவிகளைக் கொன்று குவிக்கும் இவ்வனைத்து செயல்களின் வேதனைகளை அஹ்மதி முஸ்லிம்களாகிய நாமே மிக அதிக அளவில் உணர முடியும். நாம்தான் இஸ்லாமிய போதனைகளை அறிந்திருக்கின்றோம். இஸ்லாத்தின் அமைதி மற்றும் அன்பு நிறைந்த போதனைகளை நாம் அடையாளம் கண்டுள்ளோம். கிலாஃபத்தின் கரங்களின்கீழ் ஒன்று திரண்டுள்ளதாலும் நாமே அந்த வேதனையை அதிகமாக உணர முடியும்.

இக்காலத்தில் திருக்குர்ஆனின் போதனை –யைப் புரிந்தவாறு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டுதலின் ஞானத்தைப் பெற்றவாறு காத்தமுல் குலஃபாவோடு இணைந்திருப்பதன் மூலம் அஹ்மதிகளாகிய நாம்தான் அமைதி மற்றும் சமாதானத்தின் தூதுச்செய்தியை புரிந்து பரப்ப முடியும். கிலாஃபத் உலகியல் அதிகாரங்களினாலோ உலகியல் தந்திரங்களினாலோ கிடைக்க முடியாது. பெயர்தாங்கி ஆலிம்கள் ஒன்று திரண்டு தீர்மானங்களை நிறைவேற்றுவதினாலோ முஸ்லிம்கள் ஒன்று கூடி தங்களது கலீஃபாவை தேர்ந்தெடுப்ப –தாலோ கிலாஃபத் கிடைத்து விடாது. சில ஆண்டுகளுக்கு முன்னர் இந்த முயற்சியும் நடந்து முடிந்தது. முஸ்லிம்கள் ஓரிடத்தில் ஒன்று திரண்டு தமது கலீஃபாவைத் தேர்ந்தெடுங்கள் எனக் கூறப்பட்டது. கிலாஃபத் எனும் அமைப்பு அச்சத்தை அமைதியில் மாற்றும் அமைப்பாகும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றவாறு மார்க்கத்தின் உறுதிப்பாட்டிற்குக் காரணியாகத் திகழக் கூடியதாகும். அதன் தொடர்பு அல்லாஹ் மற்றும் அவனது தூதர் கற்றுத் தந்த வழிமுறைகளினால் நிலைநாட்டப்படும் கிலாஃபத்தோடு உள்ளது.

அதனைப் பற்றி திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறி விட்டான். அது சூரா ஜுமுஆவில்,

وَاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ இதுவரை சந்தித்திராத மற்றொரு சமுதாயத்திடமும் அவன் அவரை அனுப்புவான் என வசனத்தில் வருகின்றது. இந்த வசனம் இறங்கியவுடன் சபையில் அமர்ந்திருந்த சஹாபாக்களில் ஒருவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கேட்டார்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! சஹாபாக்களின் அந்தஸ்தைப் பெற்ற அவர்கள், இதுவரை சந்தித்திராத அந்த கூட்டத்தினர் அந்த மக்கள் யார்? என்று அந்த நபர் அதே கேள்வியை மூன்று முறை கேட்டார். அப்போது ஹஸ்ரத் நபி (ஸஸ்) அவர்கள் ஹஸ்ரத் சல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களின் தோளில் கை வைத்து ஈமான் கார்த்திகை நட்சத்திரம் வரை சென்று விட்டாலும் கூட இவர்களைச் சார்ந்த மக்கள் அதனை மீண்டும் கொண்டு வருவர் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுத் த.்.ப்ஸீருல் குர்ஆன் பாபு வ ஆகரீன மின்ஹுும் லம்மா யல்ஹகூ பிஹிம் ஹதீஸ் 4897)

ஆகரீன் – இறுதிக் காலத்தில் தோன்றுபவர்களின் அந்தஸ்தைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: எனது சமுதாயம் ஓர் அருளுக்குரிய சமுதாயம் ஆகும். அதன் துவக்கக் காலகட்டம் சிறந்ததா? அல்லது இறுதிக் காலகட்டம் சிறந்ததா? என்பதை இறைவனே நன்கறிவான். (கன்ஸுல் உம்மால் தொகுதி 6 பாகம் 12 பக்கம் 71 ஹதீஸ் 34446 பாபு .்.பீ .்.பஸாயிலி ஹாதிஹில் உம்மத்தில் மர்ஹுுமதி பைரூத்திலுள்ள தாருல் குதுபில் அலமிய்யாவில் 2004 -ல் அச்சடிக்கப்பட்டது) எனவே இறுதிக் காலத்தின் சிறப்புகளைப் பற்றிய நற்செய்தியையும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழங்கியுள்ளார்கள். இந்த இறுதிக் காலத்து சிறப்பு என்பது இந்த ஆலிம்கள் மற்றும் மன்னர்களுக்குப் பின்னால் செல்வதனால் கிடைத்து விடுமா? அது முன்னவர்கள் பெற்ற சிறப்பைப் பெற்றுத் தந்து விடுமா? நிச்சயமாக இல்லை. ஏனெனில் இவர்கள் உலகவாதிகள் ஆவர். ஈமானை மீண்டும் உலகிற்கு கொண்டு வரக்கூடிய மனிதருக்குப் பின்னால் செல்வதனால் மட்டுமே அந்த சிறப்பு கிடைக்க முடியும். இன்று உலகில் ஈமானை நிலைநாட்டுவதற்கான முயற்சியை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டரின் மூலமாக நிலைநாட்டப்பட்டுள்ள அமைப்பைத் தவிர்த்து வேறெவர் செய்கின்றார்? அமைதி, நேசம் மற்றும் அன்பின் தூதுச் செய்தியுடன் இஸ்லாத்தின் போதனைகளை அந்த அமைப்பு உலகில் பரப்பி வருகிறது. உள்ளங்களில் ஈமானை நிலைநாட்ட அது முயற்சி செய்கின்றது. நிராகரிப்பு மற்றும் மார்க்கமற்றத் தன்மை என்ற இந்தக் காலகட்டத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தின் பணி இதுவேயாகும். இந்தப் பணியையே நாம் செய்ய வேண்டும். அதனை நாம் செய்தும் வருகிறோம். என்னுடனும் மற்றவர்களுடனும் நடந்த எண்ணற்ற சம்பவங்கள் உள்ளன. அமைதிக் கருத்தரங்கு நடக்கின்றது. மாநாடுகள் நடக்கின்றன. அந்நியர்களும், நமது மாநாடுகளுக்கு வருகின்றனர். இந்த தூதுச் செய்தியை, இந்த இஸ்லாத்தை உலகிற்கு எட்ட வைக்கும் அவசியம் உள்ளது. இந்த இஸ்லாத்தை நீங்கள் பரப்பினால் அதை ஏற்றுக் கொள்வதற்கு எவருக்கும் எந்தத் தடையும் இருக்க முடியாது என்று அவர்கள் கூறுகின்றனர். எனவே நாம் செய்ய வேண்டிய பணி இதுவேயாகும்.

மார்க்கத்தின் மறுமலர்ச்சி மற்றும் ஈமானை நிலைநாட்டுவதற்காக இக்காலத்தில் வாக்களிக்கப் –பட்ட மஸீஹுடன் இணைய வேண்டும். அவர் காத்தமுல் குலஃபாவாகத் திகழ்கின்றார். பின்னவர்கள் முன்னவர்களுடன் இணைந்திருப்பது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: மக்கள் அறிவு மற்றும் நுட்பமான ஞானத்திலிருந்து முற்றிலும் இழப்பிற்குரியவர்களாக ஆகிவிட்ட நிலையில் இறைவன் தூதரை அனுப்பினான். மனித உள்ளம் முழுமை பெறுவதற்கு தேவையான நுட்பமான ஞானம் மற்றும் மார்க்க ஞானங்களைப் பெறுவதிலிருந்தும், அறிவு மற்றும் செயல்ரீதியாக சிறப்பை மனித உள்ளங்கள் அடைவதிலிருந்தும் முற்றிலும் விலகி நின்றது. மக்கள் முற்றிலும் மார்க்கத்தை மறந்து விட்டனர். மார்க்கத்தின் நுட்பமான ஞானமும் முற்றிலும் மறைந்து போனது. மார்க்கத்தின் நுட்பமான ஞானத்தை அதன் உச்சம் வரை சென்றடையச் செய்ய மற்றும் மற்றும் மனித உள்ளங்களின் சீர்திருத்தத்திற் –காக அறிவு மற்றும் செயல்களின் நிலைகளை மேம்படுத்துவதற்கான ஒரு காலகட்டம் இருந்தது. அது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலகட்டமாக இருந்தது. அன்னார் உலகில் அதற்காக அவதரித்தார்கள்.

மக்கள் வழிகேட்டில் மூழ்கியிருந்தனர். அதாவது இறைவன் மற்றும் அவனது நேர்வழியிலிருந்து மிகத் தொலைவில் மக்கள் வீழ்ந்து கிடந்தனர். அப்படிப்பட்ட அந்தத் தருணத்தில் இறைவன் எழுதப் படிக்கத் தெரியாத தனது தூதரை அனுப்பினான். மேலும் அந்தத் தூதர் (ஸல்) அவர்கள் அந்த மக்களின் உள்ளங்களை தூய்மைப்படுத்தினார்கள். வேதத்தின் ஞானம் மற்றும் நுட்பமான அறிவால் அவர்களை நிரப்பினார்கள். அதாவது அடையாளங்கள் மற்றும் அற்புதங்கள் வாயிலாக முழுமையான உறுதியின் அந்தஸ்தை அன்னார் அடையச் செய்தார்கள். அடையாளங்களைக் காட்டினார்கள். அற்புதங்களைக் காட்டினார்கள். அல்லாஹ்வின் நெருக்கத்தின் காட்சிகளைக் காட்டினார்கள். அதன் மூலம் அவர்–களிடம் ஈமானில் முழுமையான உறுதியை அடையும் அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டது. இறைவனை அடையாளம் காணும் ஒளியினால் அன்னார் அவர்களின் உள்ளங்களை ஒளியூட்டினார்கள்.

அடுத்து அன்னார் கூறினார்கள்: இறுதிக் காலத்தில் தோன்றும் ஒரு கூட்டமும் உள்ளது. அவர்களும் முதலில் இருளிலும் வழிகேட்டிலும் இருப்பர். அறிவு, நுட்பமான ஞானம், நிச்சய உறுதி ஆகியவற்றிலிருந்து விலகி தொலைவில் வீழ்ந்து கிடப்பர். அப்போது அல்லாஹ் அவர்களை சஹாபாக்களைப் போன்று மாற்றுவான்.

அதாவது சஹாபாக்கள் கண்ட விஷயங்கள் அவர்களுக்கும் காட்டப்படும். எந்த அளவுக்கு என்றால் அவர்களின் உண்மை மற்றும் நிச்சய உறுதி சஹாபாக்களின் உண்மை மற்றும் நிச்சய உறுதியைப் போன்று ஆகி விடும். (அய்யாமே சுல்ஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 304)

எனவே, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது சஹாபாக்களிடம் நிச்சய உறுதி மற்றும் ஈமானை ஏற்படுத்தினார்கள். அந்த சஹாபாக்களும் தமது நிச்சய உறுதி மற்றும் ஈமானில் முழுமை பெறுவதற்காக தியாகங்களைச் செய்தனர். எல்லா பக்கமும் சூழ்ந்திருந்த இருளிலிருந்து அவர்கள் வெளியேறினர். இஸ்லாத்தை மக்கள் மறந்து கொண்டிருந்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றி இஸ்லாத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்கள். இந்த சஹாபாக்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹுடன் இணைந்து மார்க்கத்தின் ஒளியைப் பெற்றுக் கொண்டார்கள். பலதரப்பட்ட அடையாளங்களைப் பார்த்தனர். அப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான குறிப்புகள் நமது புத்தகங்களில் இடம் பெற்றுள்ளன. இருளிலிருந்து வெளியேறி ஒளியைக் காணும் அப்படிப்பட்ட பலர் இன்றும் உள்ளனர். அடையாளங்களைக் கண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைகின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னை ஏற்றுக் கொண்டவர்கள் தொடர்பாகக் கூறினார்கள்: அவர்கள் சஹாபாக்கள் பெற்றதைப் போன்று இறைவனுடைய அடையாளங்கள் மற்றும் புத்தம் புதிய உதவி ஒத்தாசைகளின் மூலமாக ஒளியையும் நிச்சய உறுதியையும் பெறுகின்றனர். அவர்கள் இறை வழியில் மக்களின் ஏளனம், எள்ளிநகையாடுதல், சாபங்கள் மற்றும் பலதரப்பட்ட ஏச்சுப் பேச்சுக்கள் மற்றும் மனதைக் காயப்படுத்தும் விஷயங்கள் மற்றும் தொடர்பை முறித்துக் கொள்ளுதல் போன்ற ஏராளமான துன்பங்களைச் சந்திக்கின்றனர். உறவினர்கள் அவர்களை விட்டுப் பிரிந்து விடுகின்ற துன்பத்தை சஹாபாக்களைப் போன்று அனுபவிக்கின்றனர். (அய்யாமே சுல்ஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 306)

இந்த சம்பவங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றிய சமுதாயத்தில் அதாவது பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் மட்டும் நடைபெறவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முழு உலகையும் ஒரே சமுதாயமாக அல்லாஹ்வின் அடியார்களாக மாற்றத் தோன்றினார்கள். எனவே உலகின் மற்ற நாடுகளிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்ட மக்களுக்கு இந்த துன்பங்கள் மற்றும் கஷ்டங்களை எதிர்கொள்ள நேரிடுகிறது. ஆனால் அவர்கள் உயர்தரமான பொறுமை மற்றும் உறுதிப்பாட்டுடன் ஒவ்வொரு கடினத்தையும் எதிர்கொள்கின்றனர்.

அல்ஜீரியாவின் உதாரணம் இன்றைய நாட்களில் நம்முன் உள்ளது. அது ஒன்றும் பழைய ஜமாஅத் கிடையாது. ஆயினும் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றுக் கொண்டு பின்னவர்களின் கூட்டத்தில் இணைந்து, கிலாஃபத்தின் கட்டுப்படுதலின்படி செயல்படுவதால் அவர்களின் ஈமான் அல்லாஹ்வின் அருளால் உச்சத்தைத் தொட்டு விடுகின்றது. அந்த இறைவழி கைதிகளின் ஈமான் மற்றும் நிச்சய உறுதியின் நிலையை நேற்று

எனக்கு அனுப்பப்பட்ட அல்லது கிடைத்த ஒரு இறைவழி கைதியின் கடிதத்திலிருந்து நம்மால் அனுமானிக்க முடியும்.

அல்லாஹ்விற்கு இலட்சக்கணக்கான நன்றிகள். அவன் எங்களுக்கு உண்மையான இஸ்லாத்தின் அருட்கொடையை வழங்கியுள்ளான். அவன் எங்களது உள்ளங்களை உயிர்ப்பித்து விட்டான். அவனது திருப்தியைப் பெறுவதற்காக ஒருவர் மற்றவர் மீது அன்பு செலுத்தக் கூடியவர்களாக அவன் எங்களை ஆக்கி விட்டான். காலத்தின் கலீஃபாவின் கரங்களில் எங்களை ஒன்று திரட்டி விட்டான் என்று அவர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் என்னை நோக்கி கூறுகிறார்: எனது தலைவரே! இறைவழி கைதியாகி விட்ட பிறகு அனைத்து நாடுகளிலிருந்தும் அஹ்மதிகள் எங்களை சந்திக்கின்றனர். இறைவனின் சிறப்பான உதவியின் காட்சிகளை நாங்கள் பார்த்து வருகின்றோம். சிறைவாசம் என்றாலும் அல்லாஹ்வின் அருளையும் அருட்கொடைகளையும் கண்டு அவர் மகிழ்ச்சி அடைகின்றார்.

அன்பு நிறைந்த ஸலாத்தை உங்களுக்கு எட்ட வைக்கும்படி இவர்கள் என்னிடம் கூறியுள்ளனர். உண்மை மேலோங்குவதற்கான பணியையும், துஆவையும் தொடர்வதற்கு அவர்கள் உறுதிபூண்டுள்ளனர். எத்துணை பெரிய கடினங்கள் வந்தாலும், உண்மையைப் பரப்ப நாங்கள் எங்களது பணிகளை தொடர்வோம். அல்லாஹ்விடம் உதவி தேடியவாறு துஆவும் செய்து வருவோம்.

இந்த சோதனை எங்களுக்கிடையிலான நேசம், சகோதரத்துவம், ஒற்றுமை, உதவி ஒத்தாசை மற்றும் கிலாஃபத்தின் மீதான அன்பில் எங்களை முன்னரை விட முன்னேறச் செய்து விட்டது. இந்த சோதனையின் காலகட்டத்தில் உங்களின் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்ட சாட்சிகளை நாங்கள் எங்களது கண்களால் கண்டோம். அல்லாஹ்வின் ஏராளமான அடையாளங்களைக் கண்டோம். அந்த அடையாளங்கள் எங்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதான ஈமானின் உறுதியில் மேலும் முன்னேறச் செய்து விட்டது என்று அவர் எழுதியுள்ளார். அல்ஜீரியாவின் பலவீனமான அஹ்மதிகளின் மீது அல்லாஹ்வின் அருள் இறங்கி விடுகிறது. கடந்த நாட்களில் அங்கு சில கைதிகள் விடுதலையும் ஆகியுள்ளனர். அல்லாஹ் மீதமுள்ள கைதிகளின் விடுதலைக்கும் விரைவான ஏற்பாட்டைச் செய்வானாக.

இன்னொரு கைதி எழுதுகின்றார்: சிறைவாச காலகட்டத்தில் இவ்விஷயத்தை நாங்கள் உணர்ந்து கொண்டோம். அல்லாஹ் ஒரு திட்டத்தின்படியே இந்த ஏற்பாட்டைச் செய்துள்ளான். அதாவது நாங்கள் கைதிகளாக்கப்பட்டோம். தண்டனை வழங்கப்பட்டது. வழக்குகள் தொடரப்பட்டன. இவை அனைத்திலும் அல்லாஹ்வின் சிறப்பான ஒரு திட்டம் இருந்தது. அவன் தனது அற்புதங்களில் சிலவற்றை எங்களுக்கு காட்ட விரும்பினான். அவன் எங்களுக்கு தனது சில அற்புதங்களையும், அடையாளங்களையும் காட்ட விரும்பியதாலேயே இந்த கஷ்டங்களை நாங்கள் எதிர்கொள்ளும்படி செய்தான். சுதந்திரமான மற்றும் சாதாரண நாட்களில் எங்களுக்கு கிடைத்த வெற்றிகளைக் கண்டு நாம் இறைவனின் முகத்தைக் கண்டு விட்டோம் என நாங்கள் கருதி வந்தோம். அவனது வழியைக் கண்டு கொண்டோம் எனவும் நாங்கள் கருதினோம். ஆனால் முன்பு குறைவாகவே கண்டோம். இப்போதுதான் இறை வல்லமையின் அசல் காட்சிகளைக் காண்கின்றோம் என தற்போது உணர்கிறோம். எனக்கு சிறைவாசத்தால் நிச்சயமாக எந்தப் பிரச்சனையும் இல்லை. ஆயினும், நான் அல்லாஹ் மற்றும் அவனது இறை வணக்கத்திற்குரிய கடமைகளை ஆற்றவில்லை என்ற உணர்வே என்னை மிகவும் நிம்மதியிழக்கச் செய்தது. சிறைவாசத்தின் போது நான் பல கனவுகளைப் பார்த்தேன். அதன் மூலம் எனக்கு மிகவும் நிம்மதி கிடைத்தது.

என்னை நோக்கி அவர் கூறுகின்றார்: நான் கனவுகளில் உங்களையும் சந்தித்தேன். உங்களது துஆக்களினால் எங்களது ஈமானும் நிச்சய உறுதியும் அதிகரித்து வந்தது. அது சிறைவாசத்தின்போது மன அமைதியைத் தந்தது. எங்களுடைய விடுதலை என்பது தங்களின் துஆ மற்றும் தூய்மையான ஜமாஅத் மக்களின் துஆக்களின் விளைவாகும். எனது மனைவிக்காகவும் நான் துஆவுக்கு வேண்டுகிறேன். அவர் மிகவும் பொறுமையுடன் செயல்பட்டார். அவருடைய மனைவி மட்டுமே அஹ்மதியாவார். அவருடைய மற்ற உறவினர்கள் அனைவரும் அஹ்மதிகள் கிடையாது. இவர் கைதியாக இருந்தபோது முதலில் அவரது தந்தை இறந்து போனார். அதாவது மனைவியின் தந்தை இறந்து போனார். பிறகு அவரது மனைவியின் சகோதரர்கள் அஹ்மதிய்யத்தின் காரணமாக அவரை விட்டு விலகினர். பெரிய சர்ச்சை எழுந்தபோது சகோதரர்களும் கூட தமது சகோதரியைக் கைவிட்டு விட்டனர். கணவரோ சிறையில் இருந்தார். சிறைவாச காலகட்டத்தில் எனது குடும்பத்தினரை விட்டும் எனது மனைவி தொலைவிலேயே இருந்தார். அவர்களும் அஹ்மதி கிடையாது. எனவே விலகியிருந்தனர். ஆனால் தூய அஹ்மதி பெண்மணிகள் தனது அன்பினால் அந்தக் குறையைப் போக்கி விட்டனர். உறவினர்கள் கைவிட்டு விட்டனர். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத் அவரை தனதாக்கிக் கொண்டது.

ஆக ஆண்களும், பெண்களும் பல்வேறு இடங்களில் தத்தமது வட்டத்தில் தியாகங்கள் செய்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறியது போன்று சஹாபாக்கள் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். அதைப் போன்று என்னை ஏற்றுக் கொண்ட மக்களும் துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டனர். ஆனால் அல்லாஹ்வின் அருளால் அல்ஜீரியாவின் சிறிய மற்றும் இந்த புதிய ஜமாஅத் தாங்கள் கடந்து வரும் சோதனையான காலகட்டத்தில் மிகவும் உறுதிப்பாட்டுடன் நிலைநிற்கின்றது. அவர்களின் உணர்வுகளின் வெளிப்பாடு இந்த இரண்டு கடிதத்திலிருந்தே நமக்கு தெரிய வருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூலமாக தொடரப்பட்ட இந்த கிலாஃபத்தின் மூலமாக எங்களின் மனநிறைவிற்கான ஏற்பாடு நடந்துள்ள –தாகவும் அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிடுகின் –றனர். எதிரிகள் அச்சத்தை ஏற்படுத்துவதற்காக இந்த நடவடிக்கைகளை எடுத்தனர். ஆனால் அல்லாஹ் தனது சிறப்பான அருளால், கிலாஃபத்தோடு இணைந்திருந்ததன் காரணமாக இந்த சோதனையில் அவர்களின் மன அமைதிக்கான ஏற்பாட்டை செய்து விட்டான்.

அல்லாஹ் மன அமைதிக்கான ஏற்பாட்டை செய்த அப்படிப்பட்ட எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன. தனிப்பட்ட முறையிலும் ஜமாஅத் அளவிலும் கஷ்டங்களின் காலகட்டம் வரத்தான் செய்யும். ஆனால் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப மன அமைதி மற்றும் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டைச் செய்து வருகிறான். இது ஒரு குறிப்பிட்ட காலகட்டம் மற்றும் நேரத்தோடு தொடர்புடையதல்ல. அதற்கான உதாரணத்தையும் நான் கூறினேன். அல்லாஹ் நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களுடன் இந்த வாக்குறுதியை செய்திருக்கிறான். அவனே அச்சத்தை அகற்றுகின்றான். ஆனால் நம்பிக்கையாளர்கள் என்னை வணங்குவதற்கான உரிமையையும் செலுத்த வேண்டும் என மீண்டும் மீண்டும் அவர்களுக்கு அவன் கவனமூட்டுகிறான். அந்த உரிமைகள் செலுத்தப்படுகின்றபோது நிச்சயமாக அச்சத்திற்கான சூழலும் வரும். ஆனால் தனிப்பட்ட ரீதியிலான மற்றும் ஜமாஅத் அளவிலான அச்சத்தின் நிலை அல்லாஹ் மற்றும் கிலாஃபத்துடன் கொண்ட தொடர்பின் மூலமாகவும், அமைதி மற்றும் பாதுகாப்பின் சூழலில் மாற்றப்படும். அல்ஜீரியாவின் அஹ்மதிகளில் சிலரை தவிர வேறெவரும் காலத்தின் கலீஃபாவை பார்த்தது கூட கிடையாது. ஆனால் ஈமானில் முழுமையானவர்களாக இருந்ததன் விளைவாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலகட்டத்தின் அன்னாரின் சஹாபாக்களுக்கு அல்லாஹ் மன நிறைவிற்கான ஏற்பாட்டை செய்தது போன்று அவர்களுக்கும் செய்கின்றான். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் பார்க்கும்போது அல்லது முதல் கிலாஃபத்தின் காலகட்டத்திலும் இதே மன அமைதிக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூலம் நிலைநாட்டப்பட்ட கிலாஃபத்தின் பரகத்தின் மூலமாக இவை நடந்தன. இரண்டாவது கிலாஃபத் காலகட்டத்தில் மிகக் கடுமையான சூழல் வந்தது. அப்போதும் அமைதிக்கான வழிவகை செய்யப்பட்டது. மூன்றாவது கிலாஃபத் காலகட்டத்திலும் மிகக் கடுமையான சூழல் வந்தது. அன்றைய பாகிஸ்தான் அதிபர் நான் அஹ்மதிகளின் கரங்களில் பிச்சைப் பாத்திரத்தை ஏந்தச் செய்வேன் எனக் கூறினார். ஆனால் அல்லாஹ் செழிப்பிற்கான ஏற்பாட்டை செய்தான். நான்காவது கிலாஃபத்தின் காலகட்டத்திலும் அல்லாஹ் அதுபோன்ற ஏற்பாட்டை செய்தான். இன்றும் கூட அல்லாஹ் அதுபோன்ற ஏற்பாட்டை செய்து வருகிறான். எனவே இது குறிப்பிட்ட காலகட்டத்தோடு மட்டும் தொடர்புடைய –தல்ல. மாறாக உண்மையான கிலாஃபத்தோடு இணைந்து நிற்கும் நம்பிக்கையாளர்களுடன் தொடர்புடையதாகும். இதனை அல்லாஹ்வே நிலைநாட்டியுள்ளான். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் செய்த வாக்குறுதிக்கு ஏற்பவே இவை அனைத்தும் நடக்கின்றன. அன்னாருக்குப் பிறகு இரண்டாம் வல்லமை என்ற கிலாஃபத்தின் மூலமாக அன்னாரின் வருகையின் நோக்கத்தை இறைவன் நிறைவேற்றுவான். மீண்டும் அல்லாஹ் வெற்றியை வழங்குவான். நம்பிக்கையாளர் –களின் அமைதிக்கான ஏற்பாட்டையும் அல்லாஹ் செய்வான்.

இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், தனது உயில் என்ற நூலில் தனது மரணம் மற்றும் கிலாஃபத் மூலமாக ஜமாஅத்திற்கு கிடைக்கும் முன்னேற்றங்களைப் பற்றி குறிப்பிட்டவாறு கூறுகின்றார்கள்: எனவே அன்பிற்குரியவர்களே! ஆரம்பத்திலிருந்தே அல்லாஹ்வின் நடைமுறை இதுதான். அவன் எதிரிகளின் இரண்டு பொய்யான மகிழ்ச்சிகளை அழித்துக் காட்டுவதற்காக தனது இரண்டு வல்லமைகளைக் காட்டுகிறன். எனவே இப்போது இறைவன் தனது பழமையான அந்த நடைமுறையை விட்டு விடுவது சாத்தியமில்லை. எனவே நான் உங்கள் முன் எடுத்துரைத்த விஷயங்களினால் வருத்தப்படாதீர்கள். உங்கள் உள்ளம் கவலையடைய

வேண்டாம். அன்னார் தனது மரணத்தை பற்றிய செய்தியைக் கூறி தமது சஹாபாக்களுக்கு ஆறுதல் வழங்குகிறார்கள்.

அன்னார் கூறுகிறார்கள்: ஏனெனில் அந்த இரண்டாவது வல்லமையைக் காண்பதும் உங்களுக்கு அவசியமாகும். மேலும் அது வருவது உங்களுக்கு சிறந்ததாகும். ஏனெனில் அது நிரந்தரமானதாகும். அதன் தொடர் மறுமை வரை அறுந்து விடாது. மேலும் நான் செல்லாத வரை அந்த இரண்டாவது வல்லமை வர முடியாது. ஆனால் நான் சென்று விட்டால் இறைவன் உங்களுக்காக அந்த இரண்டாவது வல்லமையை அனுப்புவான். அது எப்பொழுதும் உங்களுடன் இருக்கும். இறைவனின் வாக்குறுதி பராஹீனே அஹ்மதிய்யாவில் உள்ளது. மேலும் அந்த வாக்குறுதி என்னைப் பற்றியல்ல. மாறாக உங்களைப் பற்றியதாகும். நான் உம்மைப் பின்பற்றும் உமது ஜமாஅத்தை மறுமை வரை மற்றவர்களின் மீது மேலோங்கச் செய்வேன் என இறைவன் கூறியுள்ளான்.

எனவே என்னைப் பிரியும் நாள் உங்களுக்கு வர வேண்டியது அவசியமானதாகும். அதன் பிறகு நிரந்தரமான வாக்குறுதிக்கான அந்த நாள் வரும். நமது இறைவன் வாக்குறுதிகளில் உண்மை யானவனும், நன்றியுள்ளவனும், உண்மையாளனு மாவான். அவன் வாக்குறுதியளித்த எல்லாவற்றையும் உங்களுக்கு காட்டுவான். இந்த நாட்கள் உலகத்தின் கடைசி நாட்களாகும். பல துன்பங்கள் இறங்கும் காலமாகும். ஆனால் இறைவன் தெரிவித்திருக்கின்ற செய்திகள் அனைத்தும் நிறைவேறும் வரை இந்த உலகம் நிலைபெற்றிருக்கும்.

நான் இறைவனிடமிருந்து ஒரு வல்லமையாக வெளிப்பட்டுள்ளேன். நான் இறை வல்லமையின் தோற்றமாவேன். மேலும் எனக்குப் பிறகு இன்னும் சிலர் தோன்றுவார்கள். அவர்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையின் தோற்றமாக இருப்பார்கள். எனவே நீங்கள் இறைவனின் இரண்டாவது வல்லமையை எதிர்பார்த்த வண்ணம் ஒன்று சேர்ந்திருந்து துஆ செய்து கொண்டிருங்கள். ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு நல்லவர்களின் ஜமாஅத்தும் ஒன்றுகூடி துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும். அதன் மூலம் இரண்டாவது வல்லமை விண்ணிலிருந்து இறங்கி உங்கள் இறைவன் எப்படிப்பட்ட வல்லமைமிக்க இறைவன் என்பதை உங்களுக்கு காட்டட்டும். உங்கள் மரணத்தை அருகில் இருப்பதாகக் கருதுங்கள். அந்த நேரம் எப்போது வரும் என்பதை நீங்கள் அறிய மாட்டீர்கள். (ரிஸாலா அல் வஸிய்யத். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 305-306)

அதாவது கஷ்டங்களும் வரும்; துன்பங்களும் வரும். ஆனால் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கே இறுதி வெற்றி கிடைக்கும் – இன்ஷா அல்லாஹ். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக நிலைநாட்டப்பட்டுள்ள அமைப்புடன் மட்டுமே முன்னேற்றங்கள் தொடர்புடையதாக உள்ளது. உலகின் அமைதியும் கூட அதனையே சார்ந்துள்ளது. இந்த அமைப்பின் மூலமாகவே முழு உலகிலும் இஸ்லாத்தின் மேன்மையும், வெற்றியும் நிருபணமாக உள்ளது.

எனவே, அந்த வெற்றியின் செய்தியைக் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இது இறைவனின் நடைமுறையாகும். அவன் மனிதனை பூமியில் படைத்த நாளிலிருந்தே எப்போதும் இந்த நடைமுறையை வெளிப்படுத்தி வந்துள்ளான். كَتَبَ اللّٰهُ لَاَغۡلِبَنَّ اَنَا وَ رُسُلِیۡ ''நிச்சயமாக நானும் எனது தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம்'' (58:22) என அல்லாஹ் எழுதி வைத்துள்ளான் என்று அவன் கூறியதற்கிணங்க அவன் தனது நபிமார்களுக்கு தூதர்களுக்கும் உதவி செய்கின்றான்; அவர்களுக்கு வெற்றியை வழங்குகின்றான். இங்கு வெற்றி என்பதன் கருத்து, எவ்வாறு நபிமார்களும் தூதர்களும் விரும்பினார்களோ அவ்வாறே இறைவனின் உண்மையான அடையாளம் பூமியில் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதும் அதனை எவரும் எதிர்த்து நிற்க முடியாமலாக வேண்டும் என்பதும் ஆகும். எனவே இறைவன் வல்லமைமிக்க அடையாளங்களுடன் அவர்களது உண்மையை வெளிப்படுத்துகின்றான். மேலும், எந்த நேர்வழியை அவர்கள் உலகில் பரப்ப விரும்புகின்றார்களோ அதற்கான விதையை அவர்களது கைகளாலேயே அவன் விதைத்து விடுகின்றான். ஆனால், அவர்களது கைகளால் அதனை முழுமையாக நிறைவு செய்ய அவன் வைப்பதில்லை. மாறாக, வெளிப்படையில் தோல்வி என்னும் அச்சத்தை தன்னுள் கொண்டுள்ள ஒரு நேரத்தில் அவர்களுக்கு மரணத்தைக் கொடுத்து, எதிரிகளுக்கு எள்ளிநகையாடவும் பழிச்சொற்களையும் அவதூறு –களையும் கூறுவதற்கு சந்தர்ப்பத்தைக் கொடுத்து விடுகிறான். அவர்கள் எள்ளிநகையாடி பரிகாசம் செய்த பிறகு, மீண்டும் தனது வல்லமையின் மற்றொரு கையை காட்டுகின்றான். அதன் மூலம் ஓரளவுக்கு முழுமை பெறாமல் இருந்த அந்த நோக்கங்கள் அதன் முழுமையான நிறைவை எட்டி விடுவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கி விடுகிறான்.

சுருக்கமாக, இறைவன் இருவிதமான வல்லமையை வெளிப்படுத்துகின்றான். முதலாவதாக, நபிமார்களின் கைகளாலேயே தனது வல்லமையின் கரத்தை காட்டுகின்றான்.

இரண்டாவதாக, ஒரு நபி மரணித்த சமயத்தில் அந்த நபியின் மரணத்திற்குப் பின்னர் (அவரை பின்பற்றுபவர்கள்) துன்பங்களை எதிரிடும் நிலை உருவாகின்றது. எதிரிகள் வலுப்பெற்று இப்போது பணி சீர்குலைந்து விட்டது என கருதுகின்றனர். இந்த ஜமாஅத் இனி அழிந்துவிடும் என அவர்கள் உறுதியாக நம்புகின்றனர். ஜமாஅத்திலுள்ள மக்களும் சந்தேகத்தில் வீழ்ந்து விடுகின்றனர். அவர்களது இடுப்புகள் முறிந்து விடுகின்றன. பாக்கியமிழந்த பலர் மார்க்கத்தை விட்டு விலகும் வழிகளை மேற்கொண்டு விடுகின்றனர். அப்போது இறைவன் இரண்டாவது முறையாக தனது மகத்தான வல்லமையை வெளிப்படுத்துகிறான். மேலும் வீழ்ந்து கிடக்கும் ஜமாஅத்தை காப்பாற்றி விடுகிறான்.

எனவே, கடைசிவரை பொறுமையுடன் இருப்பவர் இறைவனின் இந்த அற்புதத்தை காண்கிறார். ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களின் காலத்தில் இவ்வாறே நடந்தது. அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் ஒரு அகால மரணமாக கருதப்பட்டது. காட்டுவாசிகளான பல அறிவிலிகள் மார்க்கத்தை விட்டு வெளியேறி விட்டார்கள். நபித்தோழர்கள் கூட துக்கத்தின் காரணமாக பைத்தியக்காரர்களைப் போன்று ஆகி விட்டார்கள். அப்போது இறைவன் ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களை நியமித்து மீண்டும் தனது வல்லமையின் முன்மாதிரியைக் காட்டினான். இஸ்லாம் அழிந்து கொண்டிருக்கும் வேளையிலேயே அதனை காப்பாற்றி விட்டான்.

وَعَدَ اللّٰہُ الَّذِیۡنَ اٰمَنُوۡا مِنۡکُمۡ وَ عَمِلُوا الصّٰلِحٰتِ لَیَسۡتَخۡلِفَنَّہُمۡ فِی الۡاَرۡضِ کَمَا
اسۡتَخۡلَفَ الَّذِیۡنَ مِنۡ قَبۡلِہِمۡ

''அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தில் அவர்களை உறுதியாக நிலைநிற்கச் செய்வான். அவர்களது அச்சத்தின் நிலையை மாற்றி அதற்கு பிறகு அமைதியினை வழங்குவான்.'' (24:56) அதாவது அச்சத்திற்குப் பிறகு நாம் அவர்களை உறுதியான பாதங்களுடன் நிலை நிற்கச் செய்வான் என அவர்களிடம் செய்த வாக்குறுதியை அல்லாஹ் நிறைவேற்றினான். (ரிஸாலா அல்வஸிய்யத். ரூஹானீ கஸாயின் தொகுதி 20 பக்கம் 304-305)

அல்லாஹ்வின் மாபெரும் கருணையால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஜமாஅத்திற்கு சற்று அதிர்வு ஏற்பட்டாலும் கூட ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மூலமாக ஜமாஅத்தை உடனடியாக அல்லாஹ் பாதுகாத்து விட்டான். சிலரது எண்ணம் தீங்கு விளைவிப்பதாக இருந்தாலும் கூட விரைவில் கட்டுப்பாட்டிற்குள் வந்தனர். அடுத்து முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகும் ஜமாஅத்திற்கு ஒரு பெரிய அதிர்வு ஏற்பட்டது. ஜமாஅத்தின் சில தலைவர்கள் ஜமாஅத்தை விட்டு வெளியேறினர். கிலாஃபத்தையும் நிராகரித்து விட்டனர். மிகக் கடுமையான சூழல் உருவானது. அது பெரிய சம்பவமாகும். ஆனால் முடிவு என்னவாயிற்று? கிலாஃபத்திற்கே வெற்றி கிடைத்தது. அது வெற்றியின் படித்தரங்களைக் கடந்து சென்றது. அடுத்து நான் கூறியதுபோன்று மூன்றாவது கிலாஃபத் காலகட்டத்திலும் கடினமான காலம் வந்தது. ஆயினும் அல்லாஹ் அருள் செய்தான். அரசாங்கம் அபாயகரமான சதித்திட்டம் தீட்டியது. ஆனால் ஜமாஅத்தின் முன்னேற்றத்தில் எந்த தடையையும் ஏற்படுத்த முடியவில்லை. பிறகு நான்காவது கிலாஃபத் காலகட்டத்தில் பாகிஸ்தான் அரசாங்கம் மேலும் கடினத்தை காட்டியது. அந்த சோதனையிலும் கூட அல்லாஹ் அமைதிக்கான ஏற்பாட்டை செய்தான். ஜமாஅத் புதிய புதிய படித்தரங்களைத் தாண்டிச் சென்றது. தப்லீகிற்கான புதிய வழிகள் திறந்தன. சேட்டிலைட் மூலமாக உலகில் தப்லீக் நடைபெற்றது. அடுத்து ஐந்தாவது கிலாஃபத் காலகட்டத்திலும் மேலும் பணி விரிவடைந்தது. ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்றடையும் எண்ணிக்கை இலட்சங்களைத் தாண்டி கோடிக்கணக்கை எட்டியது. ஒன்றிரண்டு நாடுகள் மட்டுமின்றி பல நாடுகளில் தற்போது எதிர்ப்பு ஆரம்பமாகி விட்டது. இதுவே அஹ்மதிய்யத்தின் உண்மைக்கான சான்றாகும். மேலும் இதுவே முன்னேற்றத்தின் அடையாளமும் ஆகும்.

அஹ்மதிய்யத்தை விட்டு மக்களை அப்புறப்படுத்த முயற்சி நடக்கின்றது. ஆனால் அல்லாஹ் தனது வாக்குறுதிக்கேற்ப முன்னேற்றத் –திற்கான வழிகளைத் திறந்து கொண்டு செல்கிறான். மேலும் ஜமாஅத் முன்னேறிக் கொண்டே செல்கிறது. இந்த அனைத்து விஷயங்களும் தற்காலிக தடைகள் ஏற்பட்டாலும் கூட இஸ்லாத்தின் வெற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாகவும் அன்னாருக்கு பிறகு நிலைநாட்டப்பட்ட கிலாஃபத்தின் மூலமாகவும் நடைபெறும் என்பதை வெளிப்படுத்துகின்றது. எதிரிகள் என்ன அழுத்தம் கொடுக்க விரும்புகின்றார்களோ கொடுக்கட்டும். ஆனால் அவர்களுக்கு தோல்வியும், இழிவுமே விதிக்கப்பட்டுள்ளது. அல்லாஹ் ஒவ்வொருவருக்கும் தத்தமது ஈமானில் உறுதியானவர்களாகத் திகழும் பாக்கியத்தையும் நற்செயலகள் செய்வதற்கான பாக்கியத்தையும் வழங்கட்டுமாக. ஒவ்வோர் அஹ்மதியின் இறை வணக்கத்தின் தரமும் உயர்ந்து கொண்டே செல்லட்டுமாக. அதன் மூலம் தான் நாமும் முன்னேற்றத்திற்கான நிரந்தர பங்குதாரர்களாகத் திகழ முடியும்.

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

# ஜுமுஆ பேருரை

நமது வாழ்வில் இன்னொரு ரமலான் வந்திருப்பதும் நீங்கள் இறையச்சமுள்ளவராக ஆகுவதற்காகத்தான் ரமலான் வந்துள்ளது என்று அல்லாஹ் கூறியிருப்பதும் இந்த இயக்கத்தை அல்லாஹ் தக்வாவிற்காகவே நிலைநாட்டியுள்ளான் என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருப்பதும் நம் மீது பெரும் பொறுப்புகளை சுமத்துகின்றது. அதாவது எல்லா நேரமும் நாம் நமது நிலைமைகளை ஆய்வு செய்து பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். அல்லாஹ் தனது குறிப்பான அருள்களுக்காக வைத்திருக்கின்ற இந்த நாட்களில் நீங்கள் உங்களிடம் எத்தகைய மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்றால், மேலும் உங்களது தக்வாவின் தரத்தை எந்த அளவுக்கு உயர்த்த நீங்கள் முயற்சி செய்ய வேண்டும் என்றால் அதையே இறைவன் நம்மிடம் விரும்பக்கூடியதாகவும் அது இருக்க வேண்டும். மாறாக, ரமலானில் மட்டுமல்லாமல் இவற்றை உங்களது வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக.

திருக்குர்ஆன், நபிமொழி மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் கட்டளைகளின் ஒளியில் ரமலான் மாதத்தின் சிறப்பு அதன் குறிக்கோள் தக்வாவை பெறுவது அதன் தகுதிகள், அதன் எதிர்பார்ப்புகள் ஆகியவை தொடர்பாக ஆன்மாவிற்கு எழுச்சியூட்டும் வகையில் ஜமாஅத் சகோதரர்களுக்கு ஹுஸூர் அவர்கள் வழங்கியுள்ள மிக முக்கியமான போதனைகள்.

காதியானைச் சார்ந்த தர்வேஷான மதிப்பிற்குரிய காஜா அஹ்மது ஹுஸைன் சாஹிப் அவர்கள் வஃபாத் ஆகி விட்டார்கள். இவர்கள் மதிப்பிற்குரிய முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். மர்ஹூமின் நன்மைகள் எடுத்துக் கூறப்பட்டு அவருக்காக ஜனாஸா காயிப் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் மார்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**2 ஜுன் 2017** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1396 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **2 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ
وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا كُتِبَ عَلَيْكُمُ الصِّيَامُ كَمَا كُتِبَ عَلَى الَّذِيْنَ مِنْ قَبْلِكُمْ لَعَلَّكُمْ تَتَّقُوْنَ ﴿۱۸۴﴾

நம்பிக்கை கொண்டவர்களே! உங்கள் முன்னோருக்கு நோன்பு கடமையாக்கப்பட்டது போன்று, உங்களுக்கும் அது கடமையாக்கப் –பட்டுள்ளது. இதனால் நீங்கள் இறையச்சமுள்ளவர் ஆகலாம். (2:184)

நமது வாழ்நாளில் இன்னொரு ரமலானை கடந்து செல்வதற்கான பாக்கியம் நமக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது –அல்ஹம்துலில்லாஹ்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் இவ்வாறு கூறினார்கள்: மக்களுக்கு ரமலானின் சிறப்பு பற்றிய அறிவு இருந்தால் எனது சமுதாயம் முழு வருடமும் ரமலானாக இருக்க வேண்டும் என்று விரும்பி இருக்கும். அப்போது ஒரு நபர் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ரமலானின் சிறப்புகள் என்ன? என்று கேட்டார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நிச்சயமாக சுவர்க்கம் ரமலானுக்காக வருடத்தின் ஆரம்பத்திலிருந்து அதன் இறுதி வரை அலங்கரிக்கப்படுகின்றது என்று கூறினார்கள். (மு.'.ஜமுல் கபீர் தொகுதி 22 பக்கம் 388-389 ஹதீஸ் 967 அபூ மஸ்வூது க.'.ப்பாரி. பைருத்திலுள்ள தாரே அஹ்யா அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டது) இவ்வாறே இன்னொரு அறிவிப்பில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எந்த நபர் ரமலானின் நோன்புகளை நம்பிக்கை கொண்ட நிலையிலும் தன்னை கணக்கிட்டுப் பார்த்தவாறும் வைப்பாரோ அவரது கடந்தகால பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடுகின்றன. (ஸஹீஹ் புகாரி கிதாபுல் ஈமான் பாபு ஸவ்மு ரமலான இஹ்திஸாபன் மினல் ஈமான் ஹதீஸ் 38) உங்களுக்கு ரமலானுக்கு என்னென்ன சிறப்புகள் உள்ளன என்பது தெரிந்திருந்தால் நிச்சயமாக நீங்கள் முழு வருடமும் ரமலானாக இருக்க வேண்டும் என்று விரும்பி இருப்பீர்கள்.

எனவே, ரமலானின் சிறப்பு என்பது மாதங்களின் நாட்களில் மட்டும் இல்லை. குறிப்பிட்ட நேரம் வரை உண்ணாமலும் குடிக்காமலும் இருப்பதில் அது இல்லை. இந்த விஷயங்களுக்காக மட்டும் அல்லாஹ் முழு வருடமும் இதற்கான தயாரிப்பில் ஈடுபடுவதில்லை. ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் வேறொரு ஹதீஸில் ஒரு மனிதன் நம்பிக்கை கொண்ட நிலையில் தன்னை கணக்கிட்டுப் பார்க்கின்றான். தனது பலவீனங்களைப் பார்க்கின்றான். தனது செயல்களைப் பார்க்கின்றான். இறைவனுக்குரிய உரிமைகளையும் அடியார்களுக்–குரிய உரிமைகளையும் செலுத்துவதன் பக்கம் கவனம் செலுத்துகின்றான். தனது செயல்களை இறைவனின் திருப்திக்கேற்ப செய்வதற்கு முயற்சி செய்கின்றான். அப்போதுதான் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. ரமலானின் இந்த நோக்கத்தைப் பெற வேண்டும் என்றே அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறியுள்ளான். நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் இதையே கூறுகின்றான். நீங்கள் இறையச்சத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்பதற்காகவே, நோன்பு உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு வருடமும் ரமலான் மாதமும் இதற்காகத்தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. தக்வா என்றால் என்ன? அதாவது ஒவ்வொரு பணியையும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக செய்வதே தக்வா ஆகும். அப்போதுதான் நீங்கள் நோன்புகளிலிருந்து அருள்களைப் பெற முடியும். மேலும் ஷய்த்தானிய தாக்குதல்களிலிருந்து தப்பிக்க முடியும். கலப்பற்ற தூய உள்ளத்துடன் இறையச்சத்தைக் கடைபிடித்தவாறு நோன்புகளை நோற்கும்போது நீங்கள் அல்லாஹ்வின் அடைக்கலத்தின் கீழ் வந்து விடுவீர்கள். மனிதன் அல்லாஹ்வின் அடைக்கலத்தின் கீழ் வரும்போதுதான் ஷய்த்தானின் தாக்குதல்களில் இருந்து அவன் தப்பிக்க முடியும். அது அல்லாமல் மனிதன் சிறிதளவு இறைவனின் அடைக்கலத்தில் இருந்து விலகிச் சென்றாலும் உடனடியாக ஷய்த்தான் அவனை அமுக்கி தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்து விடுவதாக அவன் பகிரங்கமாக அறைகூவல் விடுத்துள்ளான். எனவே, ஈமானில் முன்னேறுவதும் தன்னை கணக்கிட்டுப் பார்ப்பதும் தான் மனிதன் அல்லாஹ்வின் அடைக்கலத்தின் கீழ் வருவதற்கு காரணங்களாக அமைகின்றன. மனிதன் இறையச்சத்திற்கேற்ப நடக்கும்போதுதான் இது சாத்தியமாகும். ஈமானின் நிலைமையும் அதன் தரமும், தக்வாவின் நிலையும் அதன் தரமும் எப்படிப இருக்க வேண்டும்? இதை நாம் எப்படி பெற முடியும்? இதனை இந்த பணிக்காக யாரை இறைவன் நியமித்துள் –ளானோ அவர்தான் சரியாக கூற முடியும். இதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரான இக்காலத்தின் இமாமின் மூலமாகவே நாம் தெரிந்து கொள்ள முடியும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைத்தான் அல்லாஹ் இந்தப் பணிக்காக அனுப்பினான். அவர்கள்தான் ஈமானை மீண்டும் பூமிக்கு கொண்டு வந்து உள்ளங்களில் தக்வாவை உருவாக்குவதற்கும் அதை நிலைநாட்டுவதற்குமுரிய வழிமுறைகளைக் கற்றுத் தந்தார்கள். நாம் பார்க்கின்றோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களது நூல்கள், சபைகளில் அவர்கள் கூறிய பல விஷயங்கள், அவர்களது கட்டளைகள் ஆகியவை பல்வேறு கோணங்களில் நமக்கு இதன் பக்கம் வழிகாட்டுகின்றன. பெருமானார் (ஸல்) அவர்கள் நோன்புகளை நம்பிக்கை கொண்ட நிலைமையில் வைக்க வேண்டும். தன்னை கணக்கிட்டுப் பார்த்தவாறு வைக்க வேண்டும். அத்தகையவர்களது பாவங்கள் மன்னிக்கப்படும் என்று கூறியுள்ளார்கள். இது சாதாரண ஒரு விஷயமல்ல.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இறைவனை அடையாளம் கண்டு கொள்ளாத வரையில் ஈமானில் நிலைமையைப் பெற முடியாது என்று கூறியுள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நாம் கடந்து செல்ல வேண்டிய மிகப்பெரிய இலக்கு இறைவனை அடையாளங்கண்டு கொள்வதாகும். அவனை அடையாளங்கண்டு கொள்ள வேண்டும். நாம் இறைவனை அடையாளம் கண்டு கொள்வதில் குறையும் சந்தேகமும் மங்கிய நிலையும் இருந்தால் ஒருபோதும் நமது ஈமான் பிரகாசமானதாகவும் ஒளி வீசக்கூடியதாகவும் இருக்க முடியாது. இறைவனை நாம் எவ்வாறு அடையாளங்கண்டு கொள்ள முடியும்? இது அல்லாஹ்வின் ரஹீம் என்ற பண்பின் தோற்றம் மூலமே ஏற்படும். அந்த ரஹீம் என்ற பண்பு வெளிப்படுவதன் மூலமே இறைவனை அடையாளங்கண்டு கொள்ள முடியும். இறைவனது ரஹீம் என்ற பண்பு, அவனது அருள், வல்லமை ஆகிய பண்புகள் நமது அனுபவத்தில் வருகின்ற வகையில் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துவதிலும் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட ஒரு நிலையை வெளிப்படுத்தும்போதுதான் இந்த விஷயங்கள் நமது அனுபவத்தில் வர முடியும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் ரஹீம் என்ற பண்பும் அவனது அருளும் நமது அனுபவத்தில் வருகின்றபோது அவை மன இச்சைகளிலிருந்து நம்மை விடுவிக்கின்றன. மன இச்சைகள் பலவீனமான ஈமான் மற்றும் பலவீனமான நிச்சய உறுதியின் விளைவாக உருவாகின்றன. ஈமான் பலவீனமானதாக இல்லாமலும் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கையும் இருந்தால் பிறகு மன இச்சைகள் உருவாகாது.

அன்னார் கூறினார்கள்: ''இந்த உலகத்தின் இன்பங்களும், சொத்துக்களும், செல்வங்களும் எந்த அளவு மனிதனுக்குப் பிரியமானவையாக இருக்கின் –றனவோ அந்த அளவு மறுமை வாழ்வின் அருட்கொடைகள் அவனது நேசத்திற்குரியவையாக இருப்பதில்லை''. (அய்யாமுஸ் ஸுலஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி 14 பக்கம் 244-245) மனிதன் நாவளவில் எனக்கு மறுமையில் அருட்கொடைகள் நேசதிற்கு உரியவையாகும் என்று கூறுகின்றான். அவனுக்கு மறுமையின் அருட்கொடைகள் அதே அளவு பிரியமானவையாக இருந்திருந்தால் அவற்றை பெறுவதற்காக இந்த உலகப் பொருட்களைப் பெறுவதற்காக அவன் செய்கின்ற அதே அளவிலான முயற்சியை இதற்காகவும் செய்திருப்பான். மாறாக, அதை விட அதிகமாக அதற்காக அவன் முயற்சி செய்திருப்பான். அல்லாஹ்வின் வல்லமை, அவனது ரஹீம் என்ற பண்பு மற்றும் அவனது வாக்குறுதியின் மீது மனிதனுக்கு உண்மையான நம்பிக்கை இல்லை என்பது தெளிவாகி விட்டது. மேலும் இந்த விஷயத்தைப் பற்றி ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை இருக்கின்றது. இந்த விளக்கத்திற்குப் பிறகு ஈமான் ஒரு சாதாரண விஷயமல்ல என்பதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். அது ஒரு மிகப்பெரிய விஷயமாகும். நமக்கு ஒரு மிகப்பெரும் இலக்கு தரப்பட்டிருக்கின்றது. 30 நாட்களுக்கு நோன்பு வைப்பதற்காக மட்டும் அல்லது ரமலான் மாதம் வருவதற்காக மட்டும் நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்வதில்லை. அதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. நமது இந்த எல்லா முயற்சிகளும் இந்த மாதத்தில் நாம் பெற்ற பயிற்சியின் மூலம் அதன் விளைவுகள் முழு வருடமும் நமது செயல்களில் வெளிப்படும்போதுதான் இதன் முக்கியத்துவம் மேலும் அதிகமாகின்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் இரண்டு சொற்றொடர்களில் நமக்கு முன்னால் நமது முழு வாழ்நாளின் செயல்திட்டத்தை வைத்து விட்டார்கள். நாங்கள் நம்பிக்கை கொண்ட நிலையில் நோன்பு வைக்கின்றோம். எனவே, எங்களது எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டு விடும் என்று நாவினால் கூறுவதனால் எந்தப் பலனும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால், பெருமானார் (ஸல்) அவர்கள் இது போதுமானதல்ல என்று கூறி விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் உங்களை நீங்களே கணக்கிட்டுப் பார்த்தவாறு நோன்பு வையுங்கள் என்று கூறியதன் பொருள் இதுவேயாகும். அல்லாஹ்வுடன் உள்ள தொடர்பில் முன்னேறி இருப்பதை அளவுகோலாக வைத்து நீங்கள் உங்களது ஈமானைப் பிரித்தறிந்து கொள்ள வேண்டும். அந்த இறைவனின் அந்த கட்டளைகளுக்கேற்ப செயல்படுகின்ற அளவுகோலின் அடிப்படையில் அதை பார்க்க வேண்டும். நாம் இதற்கேற்ப செயல்படு –கின்றோமா என்று பார்க்க வேண்டும்.

ஈமானில் நிலைமை பற்றியும் அதை சரி செய்கின்ற வழிமுறை பற்றியும் விளக்கியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

விஷயம் என்னவென்றால், இறைவன் மீது ஈமான் கொள்வது இரு வகைப்படும். ஒன்று நாவளவில் மட்டும் உள்ள ஈமான் ஆகும். அதன் எந்த தாக்கமும் செயல்கள் மீது இருப்பதில்லை. நாவளவில் மட்டும் அந்த ஈமான் இருக்கும். தமது செயல்களால் அந்த ஈமானை அவர்கள் வெளிப்படுத்துவதில்லை. அல்லாஹ்வின் மீது ஈமான் கொள்வதில் இரண்டாவது வகை இதுவாகும். அதாவது செயல் அளவிலான சாட்சியம் அத்துடன் இருக்க வேண்டும்.

இந்த இரண்டாவது வகை ஈமான் உருவாகாத வரை ஒரு மனிதன் இறைவன் இருப்பதை ஏற்றுக் கொள்கின்றான் என்று என்னால் கூற முடியாது. இந்த விஷயத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதாவது ஒரு நபர் அல்லாஹவின் மீது நம்பிக்கையும் கொள்கின்றார். பிறகு அவர் பாவமும் செய்கின்றார் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. உலகின் மிகப்பெரும் எண்ணிக்கை முதல் வகையிலுள்ள ஈமானை கொண்டவர்களை உடையதாக இருக்கின்றது. நாங்கள் இறைவன் இருக்கின்றான் என்பதை ஏற்றுக் கொள்பவர்களாக இருக்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர் என்பதை நான் அறிவேன். ஆனால், இந்த உறுதிமொழியைக் கூறுவதுடன் இவ்வுலகின் அசுத்தங்களில் அவர்கள் மூழ்கியிருப்பதுடன் பாவங்களின் மாசுகளால் அவர்கள் பீடிக்கப் –பட்டிருக்கின்றனர். இறைவன் மீது ஈமான் கொள்வதன் தனிச்சிறப்பு என்ன? அந்த இறைவன் நமது கண்களுக்கு முன்னால் இருப்பதைப் பார்த்த பிறகும் அந்த ஈமான் ஏன் நம்மிடம் உருவாகவில்லை? பாருங்கள். மனிதன் மிகவும் கீழ்நிலையிலுள்ள தெரு பெருக்குகின்றவரை தன் கண் முன்னால் அவர் இருப்பதைப் பார்த்த பிறகு அவரது பொருளை எடுக்க மாட்டார். பிறகு அந்த இறைவனுக்கு எதிராகவும் அவனது கட்டளைகளுக்கு எதிராகவும் செயல்படுவதில் அவர் ஏன் தைரியமாகவும் துணிச்சலுடனும் செயல்படுகின்றார்? அந்த இறைவன் தொடர்பாக நான் அவன் மீது ஈமான் கொள்கின்றேன் என்று அவர் உறுதிமொழி கூறுகின்றார். உலகிலுள்ள பெரும்பாலான மக்கள் தங்களது நாவுகளால் நான் இந்த விஷயத்தை ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறுவதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். நாங்கள் இறைவனை ஏற்றுக் கொள்கின்றோம் என்று அவர்கள் கூறுகின்றனர். ஒருவர் அவனை பரமேசுவர் என்று கூறுகின்றார். இன்னொருவர் அவரை God என்று கூறுகின்றார். இன்னொருவர் வேறு பெயரைக் கூறி அவனை அழைக்கின்றார். ஆனால், செயலளவில் அவரது இந்த ஈமானையும் உறுதிமொழியையும் சோதித்துப் பார்க்கும்போது அது வெறும் வாதம் மட்டும்தான் என்று கூற வேண்டியது வரும். அத்துடன் எந்த செயலளவிலான சாட்சியமும் இல்லை.

அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதனின் இயல்பில் இந்த விஷயம் இருக்கின்றது. அதாவது எந்த பொருளின் மீது அவனுக்கு உறுதியான நம்பிக்கை இருக்கின்றதோ அதன் இழப்புகளிலிருந்து தவிர்ந்திருப்பதற்கும் அதன் மூலம் கிடைக்கின்ற இலாபங்களைப் பெறுவதற்கும் அவன் விரும்புகின்றான். பாருங்கள். கொடிய விஷத்தின் சிறு துளி கூட மனிதனை அழிப்பதற்குப் போதுமானது என்பதைப் பற்றிய அறிவு மனிதனுக்கு இருந்தால் ஒருபோதும் அதை உண்பதற்கான துணிச்சல் அவனுக்கு வராது. ஏனென்றால், அதை சாப்பிடுவதால் நான் அழிந்து விடுவேன் என்பது அவனுக்கு தெரியும். பிறகு இறைவன் மீது ஈமான் கொண்ட பிறகு அவன் மீது ஈமான் கொள்வதனால் ஏற்படும் விளைவுகளை அவன் ஏன் உருவாக்குவதில்லை?

அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த விஷத்திற்கு சமமாகக் கூட இறைவன் மீது அவனுக்கு நம்பிக்கை இருந்தால் அவனது உணர்வுகள் மற்றும் இச்சைகள் மீது மரணம் வந்திருக்கும். ஆனால் அவ்வாறு வரவில்லையென்றால் பிறகு அவை வெறும் வாய் பேச்சு மட்டும்தான் என்று கூற வேண்டியது வரும். ஈமானுக்கு நிச்சய உறுதியின் வடிவம் வழங்கப்பட –வில்லை. இது அவர்களது நஃப்ஸின் ஏமாற்றமாகும். ஈமான் இருக்குமென்றால் அதில் முழுமையான நம்பிக்கை இருக்க வேண்டும். அதில் நிச்சய உறுதியின் தன்மை இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் அவரது நஃப்ஸ் அவரை ஏமாற்றுகின்றது. நான் இறைவன் மீது ஈமான் கொள்கின்றேன் என்று கூறுகின்றவரும் ஏமாறுகின்றார்.

அவர்கள் கூறுகின்றார்கள்: மனிதனின் முதல் கடமை அவன், தான் அல்லாஹ்வின் மீது வைத்துள்ள ஈமானை சரி செய்ய வேண்டும். அதாவது அவர் தனது செயல்கள் மூலமாக அவரிடமிருந்து அல்லாஹ்வின் மகிமைக்கும் அவனது கட்டளைக்கு எதிராகவும் இருக்கின்ற எந்த செயலும் அவரிடமிருந்து நிகழவில்லை என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 312-313; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆக, இதுவே நம்பிக்கை கொண்ட ஒருவர் தன்னை கணக்கிட்டுப் பார்ப்பதன் வழிமுறையாகும். ரமலான் மாதத்தில் ஒரு குறிப்பான சூழல் உருவாகின்றது. மற்றவர்களைப் பார்த்தும் கூட இறைவணக்கங்கள் மற்றும் நன்மைகளின் பக்கம் மனிதனுக்கு கவனம் ஏற்படுகின்றது. அத்தகைய சூழலில் இருந்தவாறு இறைவணக்கங்கள் மற்றும் நன்மைகளின் பக்கம் கவனம் செலுத்தியவாறு தமது செயல்களின் பக்கம் கவனம் செலுத்தியவாறு நாம் நமது இறைவன் முன்னால் குனிந்தவாறு நமது கடந்த கால பாவங்களுக்காக அவனிடம் மன்னிப்பைக் கேட்க வேண்டும். பிறகு இந்த ரமலானை வருங்காலத்தில் நமது வாழ்க்கையின் நிரந்தரமான பகுதியாக நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும். இதில் நாம் செய்யும் இறைவணக்கங்களையும் இதில் நமக்கு கிடைத்த மாற்றங்களையும் நமது வாழ்வின் நிரந்தரமான பகுதியாக நாம் ஆக்கிக் கொள்ள வேண்டும். பாவங்கள் மன்னிக்கப்பட்டு சுவர்க்கத்தின் வாசல் நமக்கு திறக்கப்பட்டிருந்தால் இது எப்போதும் திறந்திருக்க வேண்டும் என்பதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும். ரமலானின் அருள்களிலிருந்து பங்கு பெறுவதற்காக மிகவும் பணிவுடன் அல்லாஹ்வின் முன்பு குனிந்தவாறு இதற்காக நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்த அருள்களை தொடர்ந்து நாம் பெற அல்லாஹ் உதவி செய்வானாக. நோன்புகளின் எந்த நோக்கத்தை அல்லாஹ் நம் முன்னால் வைத்துள்ளானோ அதாவது தக்வா நமக்கு கிடைக்க வேண்டும் என்ற அந்த தரத்தை அடைவதற்கும் நாம் முயற்சி செய்பவர்களாக இருக்க வேண்டும்.

தக்வாவில் முன்னேற்றத்தைப் பெறுவதற்கு பல்வேறு வழிமுறைகள் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு புரிய வைத்துள்ளார்கள். இது தொடர்பாகவும் சில விஷயங்களை நான் இப்போது எடுத்து வைக்கின்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மேற்கொள்களிலிருந்து அவற்றை நான் கூறுவேன். தக்வாவில் முன்னேற்றம் ஏற்படும் போதுதான் மனிதனின் ஈமானின் நிலையில் முன்னேற்றம் ஏற்படுகின்றது. நாம் இதற்கு முன்னர் கூறியிருந்தது போன்றே ஈமானின் நிலையில் தன்னைக் கணக்கிட்டுப் பார்த்தவாறு ரமலானின் நோன்புகளை கழியுங்கள் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியதன் பொருளும் இதுவேயாகும். அதாவது தக்வாவில் முன்னேறியவாறு தங்களது நிலைகளை அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப அமைத்துக் கொண்டவாறு இந்த நாட்களைக் கழியுங்கள். இதனை நீங்கள் வெற்றியுடன் கழித்து விட்டால் பிறகு தக்வா வாழ்க்கையின் நிரந்தரமான பகுதியாக ஆகி விடும். மனிதன் ரமலானில் மட்டும் தனது செயலளவிலான நிலைமைகளைச் சரிசெய்வ –தில்லை. மாறாக, இந்த அருள் நீடித்திருக்கின்ற அருளாக வேண்டும்.

இதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தின் போதனையின் குறிக்கோள் தக்வாவை உருவாக்குவதாக இருந்தது. ஆனால், அந்த தக்வா தான் இன்று நமக்கு தென்படவில்லை. தொழுகின்றார்கள்; நோன்பு நோற்கின்றார்கள். ஆனால் அவர்களிடம் தக்வா இல்லாமல் இருப்பதால் இதே தொழுகைகளும் நோன்புகளும் அவர்களை பாவிகளாக ஆக்குகின்றன.

இன்று இஸ்லாத்தின் பெயரில் தீவிரவாத செயல்கள் நடைபெறுவதை நாம் பார்க்கின்றோம். அப்பாவிகள் கொலை செய்யப்படுகின்றனர். தக்வா இல்லாததனால்தான் இவை நடக்கின்றன. ஒவ்வொரு நாளும் இதுபோன்ற ஏதாவதொரு சம்பவம் நிகழ்கின்றது. அவை முஸ்லிம்கள் தரப்பிலிருந்தே நிகழ்கின்றன. இரண்டு நாட்களுக்கு முன்னர் ஆப்கானிஸ்தானில் மிகவும் கொடூரமான முறையில் ஏறக்குறைய 100 பேர் கொலை செய்யப்பட்டிருக்–கின்றனர். இவர்களுக்கு ரமலான் நற்பலனைத் தருமா? இவர்கள் ரமலானின் சிறப்புகளைப் பெற்று அதன் அருள்களைப் பெறகூடியவர்களாக இருக்க முடியுமா? நிச்சயமாக இருக்க முடியாது. ஏனென்றால், இறைவனின் கட்டளைகளுக்கு எதிராக செயல்படக் கூடிய மக்களாக இவர்கள் இருக்கின்றனர். இவர்கள் இறைவனின் கட்டளைகளை விட்டு விலகி தொலைவில் செல்கின்றனர். ஏனென்றால், அவர்கள் தக்வாவை விட்டும் விலகி தொலைவில் சென்று விட்டனர். முற்றிலும் திருக்குர்ஆனின் போதனைகளுக்கேற்பவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தக்வா இல்லாமல் தொழுகைகளும் பயனற்றவையாகும். அவை நரகத்தின் சாவியாகும். அதாவது நரகத்தின் பக்கம் கொண்டு செல்பவையாகும் என்று கூறியுள்ளார்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 48; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) அத்தகைய மக்களுக்கு ரமலான் எவ்வாறு பலனைத் தர முடியும்? அவர்கள் தக்வா இல்லாதவர்களாக இருக்கின்றனர். அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரில் அநீதியிழைக்கின்றனர். அத்தகையவர்கள் ஒருபோதும் ரமலானிலிருந்து அருள்களைப் பெற முடியாது. மாறாக, அவர்கள் அல்லாஹ்வின் பிடியின் கீழ் வரவிருக்கின்றார்கள். இத்தகைய தருணத்தில் அநீதி மற்றும் காட்டுமிராண்டித்தனமான செயல்களைப் பற்றி கேட்கும்போதும் அவற்றை பார்க்கும்போதும் அஹ்மதிகளாகிய நாம் முன்பை விட அதிகமாக இஸ்திக்ஃபார் செய்தவாறு, அல்லாஹ்வை புகழ்ந்தவாறு இருக்க வேண்டும். அந்த இறைவன் இந்த கொடுமையிழைக்கின்ற மக்களிலிருந்து நம்மை தனியாகப் பிரித்துக் கொண்டு சென்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்கியுள்ளான். எனவே, நாம் நமது செயல்களின் பக்கம் நமது பார்வையை வைத்திருக்க வேண்டும். நமது ஈமானின் வலிமைக்காக கவலைப்படுபவர்களாக நாம் இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு இறைவனை சந்திக்க வைக்கின்ற அந்த வழியைக் காட்டியுள்ளார்கள். அதற்காக நாம் இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஈமானின் வேர் தக்வா மற்றும் தூய்மையாகும். இதிலிருந்தே ஈமான் ஆரம்பமாகின்றது. இதன் மூலமே இதற்கு நீர்பாய்ச்சப்படுகின்றது. இதன் மூலமே மன இச்சைகள் அமுங்கி விடுகின்றன. (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 243; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அவர்களது இந்தக் கூற்றிலிருந்து இவ்விஷயம் மேலும் நமக்கு தெளிவாகி விட்டது. அதாவது, தக்வா இல்லாமல் ஈமான் உருவாகவே முடியாது. ஈமானின் வேர் தக்வா என்பது மட்டுமல்ல. மாறாக, ஈமானை பாதுகாப்பது அதனை வளர்ச்சி அடையச் செய்வது ஆகியவையும் கூட தக்வா இல்லாமல் ஏற்பட முடியாது. தக்வா இருந்தால் செயல்கள் நல்லதாக இருக்கும். செயல்கள் நல்லவையாகவும் அல்லாஹ்வின் திருப்திக்கேற்பவும் இருந்தால் ஈமானில் முன்னேற்றம் ஏற்படும்.

இதிலிருந்து இந்த விஷயமும் தெளிவாகி விட்டது. ரமலானின் சிறப்புகளின் கனியும் கூட தக்வாவில் முன்னேறாமல் கிடைக்காது. தக்வாவில் முன்னேற்றம் ஏற்பட்டால் ஈமானிலும் முன்னேற்றம் ஏற்படும். தன்னை கணக்கிட்டுப் பார்ப்பதன் பக்கம் கவனம் ஏற்படும்போது, மனிதன் தன்னை ஆய்வு செய்து பார்க்கும்போது பிறகு மன இச்சைகளும் அமுங்கி விடும். நான் ஏற்கனவே கூறியிருந்தது போன்று மன இச்சைகள் அமுங்குவதுதான் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப நம்மை செயல்பட வைத்து அவனது நெருக்கத்தை நமக்கு பெற்றுத் தருகின்றது.

அசல் தக்வாவின் உண்மை நிலையை மேலும் விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: எதனால் மனிதன் கழுவப்படுகின்றானோ, எதன் மூலமாக மனிதன் தூய்மையயடைகின்றானோ, மேலும் எதற்காக நபிமார்கள் வருகின்றனரோ அந்த அசல் தக்வா உலகிலிருந்து காணாமல் போய் விட்டது. அது قَدْ أَفْلَحَ مَنْ زَكّٰهَا – தன்னை தூய்மைப்படுத்தியவனே வெற்றி பெற்றான் (92:10) என்பதற்கேற்ப இருக்கின்றது. தூய்மை மிகவும் சிறந்த விஷயமாகும். மனிதன் தூய்மையானவனாகவும் பரிசுத்தமானவ–னாகவும் இருந்தால் மலக்குகள் அவரைக் கட்டித் தழுவுகின்றனர். மக்கள் இதற்கு மதிப்பளிப்ப–தில்லை. அதாவது அவர்களுக்கு இன்பங்கள் கிடைக்கின்ற ஒவ்வொரு பொருளும் ஹலாலான வழியில் கிடைக்க வேண்டும் என்பதில் அவர்களுக்கு கவனம் இருப்பதில்லை.

மக்களிடம் தக்வா பற்றிய மதிப்பு இருக்கும் என்றால் உலக இன்பங்களின் ஒவ்வொரு பொருளும் அவர்களுக்கு ஹலாலான வழிகள் மூலம் கிடைக்க வேண்டும். ஹராமான வழிகள் மூலம் அவை கிடைக்கக் கூடாது; தகாத வழிகளில் அவை கிடைக்கக் கூடாது.

அவர்கள் கூறுகின்றார்கள்: பொருள் கிடைக்க வேண்டும் என்பதற்காக திருடன் திருடுகின்றான். ஆனால் அவன் பொறுமையை மேற்கொண்டிருந்தால் அல்லாஹ் வேறு வழியில் அவனை செல்வந்தராக ஆக்கியிருப்பான். ஆனால் அவன் பொறுமையை கடைபிடித்திருந்தால் இறைவன் வேறு வழியின் மூலம் அவனது விருப்பத்தை நிறைவேற்றியிருப்பான். அதன் மூலம் அவனது திருப்தி அவனுக்கு கிடைத்திருக்கும்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது. நம்பிக்கை கொண்டவனாக இல்லாத நிலையில் தவிர, எந்தவொரு திருடனும் திருடுவதில்லை. நம்பிக்கை கொண்டவனாக இல்லாத நிலையில் தவிர, எந்தவொரு விபச்சாரியும் விபச்சாரம் செய்வதில்லை.

ஈமானின் நிலைமை அழிந்து விடும்போது பிறகு இந்த செயல்கள் அவனால் நிகழ்கின்றன.

அவர்கள் கூறுகின்றார்கள்: ஆட்டின் தலைக்கு மேல் சிங்கம் நிற்கும்போது அது புல்லைக் கூட தின்ன முடியாது.

அந்த ஆட்டிற்கு இருக்கின்ற ஈமான் கூட மனிதர்களிடம் இல்லையா?

பிறிதோரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சபையில் கூறிய விஷயம் பத்திரிகையில் இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது. ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: ஹதீஸில் இவ்வாறு வந்துள்ளது. நம்பிக்கை கொண்டவராக இருக்கும் நிலையில் திருடன் திருடுவதில்லை. இது முற்றிலும் உண்மையான விஷயமாகும். ஆட்டின் தலைக்கு மேல் சிங்கம் நின்று கொண்டிருந்தால் அது மற்றவர்களின் வயலில் மேயச் செய்வது ஒருபுறமிருக்கட்டும். அந்த ஆடு ஹலாலானவற்றை உண்பதைக் கூட மறந்து விடுகின்றது. இதைப் போன்றே இறைவன் மீது அச்சம் இருந்தால் அந்த மனிதன் பாவம் செய்வது சாத்தியமற்றதாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: அசல் வேர் மற்றும் குறிக்கோள் தக்வா ஆகும். எவருக்கு அது கிடைத்து விடுகின்றதோ அவரால் எல்லாவற்றையும் பெற முடியும். இது இல்லாமல் மனிதன் சிறிய மற்றும் பெரிய பாவங்களிலிருந்து தப்பிக்க முடியாது.

அவர்கள் கூறுகின்றார்கள்: மனித அரசாங்கத்தின் கட்டளைகள் பாவங்களிலிருந்து ஒருவரை தவிர்ந்திருக்கும்படி செய்ய முடியாது. மக்களுக்கு அச்சம் ஏற்பட வேண்டும் என்பதற்காக ஆட்சியில் இருப்பவர்கள் எப்போதும் மனிதர்களுடன் சேர்ந்து திரிவதில்லை. மனிதன், தான் தனியாக இருப்பதாகக் கருதியவாறு பாவம் செய்கின்றான். அது அல்லாமல் அவன் ஒருபோதும் அவ்வாறு பாவம் செய்ய மாட்டான். தான், தனியாக இருப்பதாக அவன் தன்னைப் பற்றிக் கருதும்போது அந்த சமயத்தில் அவன் நாத்திகனாக ஆகி விடுகின்றான். தனியாக இருக்கும்போது இறைவன் என்னை பார்க்கவில்லை என்று கருதுவதனால் அந்த சமயத்தில் அவன் நாத்திகனாக ஆகி விடுகின்றான். எனது இறைவன் என்னுடன் இருக்கின்றான். அவன் என்னை பார்க்கின்றான் என்று அவன் எண்ணுவதில்லை. அது அல்லாமல் அவன் இவ்விஷயத்தை புரிந்திருந்தால் அவன் ஒருபோதும் பாவம் செய்ய மாட்டான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: தக்வாவின் மூலமாகவே எல்லா பொருள்களும் கிடைக்கின்றன. ஒவ்வொரு பொருளும் தக்வாவை சார்ந்தே இருக்கின்றது. திருக்குர்ஆன் இதனுடனேயே ஆரம்பமாகின்றது. இய்யாக்க நஃபுது வஇய்யாக்க நஸ்தயீன் என்பதன் கருத்தும் தக்வா ஆகும். மனிதன் ஒரு செயலைச் செய்தாலும் அச்சத்தால் அதை செய்யும் துணிச்சல் அவனுக்கு வருவதில்லை. அதாவது அந்த செயலை தன்னுடன் தொடர்புபடுத்திக் கூற அவனுக்கு துணிச்சல் இருப்பதில்லை. அதனை இறைவனின் உதவியாக அவன் கருதுகின்றான். பிறகு வருங்காலத்திலும் அவனிடமே அவன் உதவி கேட்கின்றான்.

இய்யாக்க நஃபுது – உன்னையே நாங்கள் வணங்குகின்றோம் என்று மனிதன் கூறுகின்றான். சுயமே மனிதன் இறைவனை வணங்குகின்றான். அமல் செய்கின்றான். ஆனால், அதனை அவன் தன்னுடன் தொடர்புபடுத்திக் கூறுவதில்லை. தானே அந்த செயலைச் செய்தும் கூட அதனை தன்னுடன் தொடர்புபடுத்தி அவன் கூறுவதில்லை. மேலும் இய்யாக்க நஸ்தயீன் என்று கூறுகின்றான். அதாவது இந்த இறைவணக்கத்தைக் கூட உனது உதவியினாலேயே நான் செய்கின்றேன். நீ நல்வாய்ப்பு தந்ததன் காரணமாகத்தான் இறைவணக்கம் செய்ய முடிகின்றது. அது அல்லாமல் இறைவணக்கம் செய்ய முடியாது என்று கூறி வருங்காலத்திற்காகவும் அவனிடமே மனிதன் உதவி கேட்கின்றான். இறைவன் தொடர்ந்து நல்வாய்ப்பை வழங்கினால்தான் இபாதத்திற்கான நல்வாய்ப்பும் மனிதனுக்கு கிடைக்கின்றது.

எனவே, இதுவே தக்வாவின் தரமாகும். பிறகு அதற்கு அடுத்த அதிகாரமும் ஹுதன்லில் முத்தகீன் என்பதிலிருந்து ஆரம்பமாகின்றது. அதாவது இறையச்சமுடையோருக்கு வழிகாட்டக் கூடிய திருக்குர்ஆன் இருக்கின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: தொழுகை, நோன்பு, ஸக்காத் ஆகியவை மனிதன் இறையச்சமுள்ளவனாக ஆகும்போதுதான் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த தருணத்தில் பாவத்தின் பக்கம் அழைக்கக் கூடிய விஷயங்களை அல்லாஹ் அகற்றி விடுகின்றான். அதாவது முழுமை–யான தக்வா இருந்தால் பாவத்தை தூண்டக்கூடிய, பாவத்தின் பக்கம் அழைக்கக்கூடிய எல்லா விஷயங்களையும் அல்லாஹ் அழித்து விடுகின்றான்.

அன்னார் கூறுகின்றார்கள்: மனைவியின் தேவை ஏற்பட்டால் இறைவன் அவருக்கு மனைவியை வழங்குகின்றான். மருந்து தேவைப்பட்டால் அவருக்கு மருந்தை வழங்குகின்றான். எந்த பொருள் தேவைப்பட்டாலும் அல்லாஹ் அவருக்கு அதனை வழங்குகின்றான். அவர் அறியாத அத்தகைய இடத்திலிருந்து அவருக்கு வாழ்வாதாரத்திற்கான பொருள்களை வழங்குகின்றான்.

அவர்கள் கூறுகின்றார்கள்: திருக்குர்ஆனின் இன்னொரு வசனத்தில் இவ்வாறிருக்கின்றது.

إِنَّ الَّذِينَ قَالُوا رَبُّنَا اللَّهُ ثُمَّ اسْتَقَامُوا تَتَنَزَّلُ عَلَيْهِمُ الْمَلَائِكَةُ أَلَّا تَخَافُوا وَلَا تَحْزَنُوا

இதன் கருத்தும் கூட இறையச்சமுள்ளவராக ஆகுவதாகும். அதாவது எவர்கள் அல்லாஹ் எங்களது இறைவன் ஆவான் என்று கூறி பிறகு நிரந்தர மனப்பாங்குடன் தங்களது இந்தக் கொள்கையில் உறுதியாக நிலைத்திருக்கின்றானரோ, அல்லாஹ் எங்களது இறைவனாவான். அவனே எங்களது தேவைகளை நிறைவேற்றுபவன் ஆவான். அவனே பராமரிப்பவன் என்பதில் நிலைத்து நிற்கின்றனரோ அவர்கள் மீது மலக்குகள் இறங்குவர். நீங்கள் அச்சப்பட வேண்டாம். உங்களது கடந்த கால செயல்களுக்காகவும் நீங்கள் அஞ்ச வேண்டாம். ஏனென்றால் நீங்கள் தக்வாவை கடைபிடித்–துள்ளீர்கள் என்று கூறுவர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இதன் கருத்தும் இறையச்சமுடையவராக ஆகுவதாகும். ஸும்மஸ்தகாமு அதாவது அவர்கள் மீது பூகம்பங்கள் வந்தன. சோதனைகள் வந்தன. புயல்கள் வீசின. ஆனால், அவர்கள் அவனிடம் செய்த உடன்படிக்கையை கை விட்டு விட்டு முகம் திரும்பிச் சென்று விடவில்லை.

இறைவனிடன் உடன்படிக்கை செய்த பிறகு அதில் உறுதியாக நிலைத்திருக்க வேண்டும். ஒவ்வொரு வருடமும் ரமலான் வரும்போது இதற்கேற்ப செயல்பட வேண்டும். தக்வாவை கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு ஒரு மாதம் வரை சுவர்க்கத்தின் கதவுகள் நமக்கு திறந்திருக்கும் என்ற நிலை இருக்கக் கூடாது. இஸ்திகாமத் அதாவது உறுதியாக நிலைத்திருப்பது நிபந்தனையாகும். இறைவன் கூறுகின்றான்: அவர்கள் அவ்வாறு செய்து தங்களது உண்மையையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்திக் காட்டியபோது அதற்குரிய நற்கூலியாக تَتَنَزَّلُ عَلَيْهِمُ الْمَلَائِكَةُ – அவர்கள் மீது மலக்குகள் இறங்கினர். நீங்கள் அச்சப்படவோ துயரப்படவோ வேண்டாம். உங்களது இறைவன் உங்களது பாதுகாவலனாக இருக்கின்–றான் என்று கூறினர். وَأَبْشِرُوا بِالْجَنَّةِ الَّتِي كُنْتُمْ تُوعَدُونَ – இந்த சொர்க்கத்தின் காரணமாக நீங்கள் மகிழ்ச்சி அடையுங்கள் என்று அவர்கள் நற்செய்தி கூறுவர். இந்த சுவர்க்கம் என்பதன் கருத்து இவ்வுலகின் சுவர்க்கமாகும். மறுவுலகில் கிடைக்கும் சுவர்க்கம் அல்ல. தக்வாவிற்கேற்ப நடப்பவர்களுக்கு இந்த சுவர்க்கத்தைப் பற்றிய நற்செய்தியை அவர்கள் வழங்குகின்றனர். திருக்குர்ஆனில் இது பற்றி وَلِمَنْ خَافَ مَقَامَ رَبِّهِ جَنَّتَانِ என்று வந்துள்ளது.

பிறகு இந்த வசனத்தில் இறைவன் கூறுகின்றான்: نَحْنُ أَوْلِيَاؤُكُمْ فِي الْحَيَاةِ الدُّنْيَا وَفِي الْآخِرَةِ இந்த உலகிலும் மறுவுலகிலும் நாங்கள் உங்களது நண்பனாகவும் உங்களுக்கு போதுமானவர்களாகவும் நாங்கள் இருப்போம்.

எனவே, நிரந்தர மனப்பாங்குடன் நன்மையில் நிலைத்திருப்பவர்களது பாவங்களை அல்லாஹ் மன்னிக்கின்றான். அது மட்டுமல்லாமல் அவன் அவர்களுக்கு உலகின் அருட்கொடைகளையும் வழங்குகின்றான். மறுவுலகிலும் அவர்களது நண்பனாகவும் அவர்களுக்கு போதுமானவனாகவும் இறைவன் இருக்கின்றான். ரமலானில் நம்மில் தமது நிலமைகளில் மாற்றத்தை ஏற்படுத்தி நிரந்தர மனப்பாங்குடன் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப தமது வாழ்வை கழிக்கின்றவர்களும் இவ்வாறு வாழ்வை கழிக்க முயற்சி செய்பவர்களும் எவ்வளவு நற்பாக்கியம் பெற்றவர்களாக இருக்கின்றனர்?

தக்வா மற்றும் கொண்ட கொள்கையில் உறுதியாக நிலைத்திருப்பது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஆரம்ப நாட்களில் உண்மையான முஸ்லிம்களாக இருந்தவர்களுக்கு பொறுமையை மேற்கொள்ள வேண்டியதிருந்தது.

சஹாபாக்கள் மீது எத்தகைய காலகட்டம் வந்தது என்றால் அவர்கள் இலைகளை சாப்பிட்டு வாழ்வை கழிக்க வேண்டியது வந்தது. சில நேரங்களில் ரொட்டித் துண்டுகள் கூட அவர்களுக்கு கிடைக்காமல் இருந்தது. இறைவன் நன்மை செய்யாமல் எந்தவொரு மனிதனும் எவருக்கும் நன்மை செய்து விட முடியாது. எந்த மனிதன் தக்வாவை கடைபிடிக்கின்றாரோ இறைவன் அவருக்காக கதவுகளைத் திறந்து விடுகின்றான்.

مَنْ يَتَّقِ اللَّهَ يَجْعَلْ لَهُ مَخْرَجًا وَيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ

இந்த வசனத்தின் பொருள் இதுவாகும். இந்த வசனத்தில் இரு பகுதிகள் உள்ளன. எவர் அல்லாஹ்வுக்கு அஞ்சுவாரோ அவருக்கு அல்லாஹ் ஏதேனும் வழியைத் திறந்து தருவான். மேலும், وَيَرْزُقْهُ مِنْ حَيْثُ لَا يَحْتَسِبُ அவர் அறியாத இடத்திலிருந்து அவருக்கு ரிஸ்க வழங்குவான். **(65:3,4)**

ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இறைவன் மீது உண்மையான நம்பிக்கையை வையுங்கள். அதன் மூலம் அனைத்தும் உங்களுக்கு கிடைக்கும். கொள்கையில் உறுதியாக நிலைத்திருக்கும் தன்மை இருக்க வேண்டும். நபிமார்களுக்கு எந்த அளவு தகுதிகள் கிடைத்திருக்கின்றதோ அவை அனைத்துமே இஸ்திகாமத்தின் மூலமாகவே அவர்களுக்கு கிடைத்திருக்கின்றது.

அவர்கள் கூறுகின்றார்கள்: வெறுமனே காய்ந்த தொழுகைகள் மற்றும் நோன்புகள் மூலமாக என்ன கிடைக்கும்? (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 204; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது) ரமலானில் மட்டும் தொழுது நோன்பு வைப்பதனால் எதுவும் கிடைக்கப் போவதில்லை. நிரந்தர மனப்பாங்குடன் செயல்பட்டால் எல்லாமே கிடைக்கும்.

எனவே அல்லாஹ் நம்மை இறையச்சமுள்ளவர்–களாக ஆக்க விரும்புகின்றான். அதன் மூலம் கணக்கில்லாமல் அவனது அருள்களின் கதவுகள் நமக்காக திறக்கப்பட இருக்கின்றது. மேலும் குறிப்பாக ரமலானின் தக்வாவை கடைபிடிப்பவர்களுக்கு தனது அருள்களின் கதவுகளை அந்த இறைவன் திறக்கின்றான்.

இறையச்சமுள்ளவராக ஆகுவதற்கு தீமைகளை விட்டு விட்டால் மட்டும் போதாது. மாறாக நன்மைகளையும் செய்ய வேண்டும். இதைப் பற்றி விளக்கியவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: இறையச்சமுள்ளவராக ஆவதற்கு விபச்சாரம், திருட்டு, உரிமைகளைப் பறிப்பது, வெளிவேஷம், கர்வம், பிறரை அற்பமாகப் பார்ப்பது, கருமித்தனம் ஆகியவற்றை கை விட்டு விடுவதில் உறுதியாக இருப்பதுடன், தீய ஒழுக்கங்களிலிருந்து தவிர்ந்திருப்ப–துடன் அதற்கு எதிரில் உயரிய நல்லொழுக்கங்களில் முன்னேறிச் செல்லவும் வேண்டும். இது கட்டாய நிபந்தனையாகும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: நல்லொழுக்கத்–துடனும், பரிவுடனும், அனுதாப உணர்வுடனும் நடந்து கொள்ள வேண்டும். இறைவனிடம் உண்மையான நன்றியுணர்வையும், உண்மையையும் வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். தொண்டாற்றுவதற்கான புகழுக்குரிய உயர்ந்த அந்தஸ்தைத் தேட வேண்டும். புகழ்வதற்கு தகுதியுள்ள அத்தகைய வழக்கத்திற்கு மாற்றமாக அமைகின்ற அத்தகைய நன்மைகளையும் அத்தகைய தொண்டுகளையும் செய்ய வேண்டும். அப்போதுதான் தக்வாவின் உயர்ந்த தரத்தை நாம் அடைய முடியும். சுயநலமின்றி பிறருக்கு நன்மைகள் செய்ய வேண்டும். அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும் அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவதிலும் எத்தகைய உயர்வான தரத்தை நாம் பெற்றிருக்க வேண்டும் என்றால் அது புகழ்வதற்கு தகுதியுடையதாக இருக்க வேண்டும்.

அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த செயல்கள் மூலமாகவே மனிதன் இறையச்சமுள்ளவன் என்று அழைக்கப்படுகின்றான். எவர்கள் இவ்விஷயங்களை உள்ளடக்கியவராக விளங்குகின்றனரோ, அவர்களே உண்மையான இறையச்சமுள்ளவராக இருக்கின்றார். அதாவது தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு நல்லொழுக்கமும் தனித்தனியாக ஒவ்வொரு நபரிடமும் இருந்தால் அவரை நாம் இறையச்சமுடையவர் என்று கூற மாட்டோம். ஒட்டுமொத்தமாக இந்த எல்லா நல்லொழுக்கங்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருப்பவரைப் பற்றியே لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُونَ அதாவது அவருக்கு எந்த அச்சமும் துக்கமும் இருக்காது என்று கூறப்பட்டிருக்கின்றது. இதற்கு பிறகு அவர்களுக்கு வேறென்ன வேண்டும்? பிறகு அப்படிப்பட்டவர்களை பாதுகாப்பவனாக இறைவன் ஆகி விடுகின்றான். அது குறித்து அவன், அவன் நல்லவர்களின் பாதுகாவலனாக இருக்கின்றான் என்று கூறுகின்றான்.

ஹதீஸில் இவ்வாறு வருகின்றது: பிறகு அவர்கள் பிடிக்கின்ற கையாக அல்லாஹ் ஆகி விடுகின்றான். அவர்கள் பார்க்கின்ற கண்ணாக அவன் ஆகி விடுகின்றான். அவர்கள் நடக்கின்ற கால்களாக அவன் ஆகி விடுகின்றான்.

இன்னொரு ஹதீஸில் இவ்வாறு வருகின்றது: இறைவன் கூறுகின்றான். எவர் எனது நண்பனிடம் பகைத்துக் கொள்கின்றாரோ அவர் என்னை எதிர்த்து நிற்பதற்கு ஆயத்தமாகட்டும் என்று நான் அவரிடம் கூறுகின்றேன். இன்னோரிடத்தில் அவன் கூறுகின்றான்: எவர் இறைவனின் நண்பர் மீது தாக்குதல் நடத்துகின்றாரோ அவர் மீது இறைவன் பெண் சிங்கத்திடமிருந்து அதன் குட்டியைப் பறிக்கின்ற ஒருவன் மீது அந்த பெண் சிங்கம் பாய்ந்து தாக்குவது போன்று தாக்குகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 400-401; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு தக்வாவின் முக்கியத்துவம் தொடர்பாகவும், தான் இறைவன் புறமிருந்து நியமிக்கப்பட்டதன் நோக்கத்தைப் பற்றியும் விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அல்லாஹ் நம்மை எந்த விஷயத்திற்காக நியமித்துள்ளான் என்றால் தக்வாவின் மைதானம் காலியாக இருக்கின்றது. எனவே, தக்வா இருக்க வேண்டும். வாளை ஏந்தக் கூடாது. இது ஹராமாகும். நீங்கள் தக்வாவை கடைபிடிப்பவராக இருந்தால் முழு உலகமும் உங்களுடன் இணைந்திருக்கும். எனவே, தக்வாவை உருவாக்குங்கள். மக்கள் மது அருந்துகின்றனர். எவர்களது மத கோட்பாடுகளில் மது அருந்துவது ஒரு முக்கிய அம்சமாக வைக்கப்பட்டிருக்கின்றதோ அவர்களுக்கு தக்வாவுடன் எந்த தொடர்பும் இருக்க முடியாது. அவர்கள் நன்மைகளை எதிர்த்து போர் புரிகின்றனர்.

எனவே, அல்லாஹ் நமது ஜமாஅத்திற்கு அத்தகைய நற்பாக்கியம் பெற்றவர்களை வழங்கி அவர்களுக்கு தீமைகளை எதிர்த்து போரிடுவதற்கான நல்வாய்ப்பை வழங்கி அவர்கள் தக்வாவிலும் தூய்மையிலும் முன்னேறிச் செல்பவர்களாக இருந்தால் அதுவே மிகப்பெரிய வெற்றியாக இருக்க முடியும். அதைவிட தாக்கத்தை

ஏற்படுத்தக்கூடிய வேறு எந்த விஷயமும் இருக்க முடியாது.

அவர்கள் கூறுகின்றார்கள்: இப்போது உலகிலுள்ள எல்லா மதங்களையும் பாருங்கள். அவற்றின் உண்மையான நோக்கமான தக்வா இல்லாமல் ஆகி விட்டது. உலகின் அழகுகள் இறைவனாக ஆக்கப்பட்டிருக்கின்றன. உண்மையான இறைவன் மறைந்திருக்கின்றான். உண்மையான இறைவன் இழிவுபடுத்தப்படுகின்றான். இறைவன் சுயமே தன் மீது நம்பிக்கை கொள்வதை விரும்புகின்றான். உலகத்திற்கு அவனை பற்றிய ஞானம் கிடைக்க வேண்டும். எந்த மக்கள் உலகத்தை இறைவனாக கருதுகின்றனரோ அவர் இறைவன் மீது நம்பிக்கை வைப்பவர்களாக இருக்க முடியாது. (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 357-358; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு போதனை செய்தவாறு அவர்கள் கூறுகின்றார்கள்: எவர்கள் பைஅத் செய்து விட்டு இறைவனின் பிடியிலிருந்து தப்பிக்க வேண்டும் என்று விரும்புகின்றனரோ அவர்கள் தவறிழைக்கின்றனர். அவர்களது நஃப்ஸ் அவர்களை ஏமாற்றி விட்டது. பாருங்கள். மருத்துவர் எந்த அளவு நோயாளிக்கு மருந்தை குடிக்க வைக்க விரும்புகிறாரோ நோயாளி அந்த அளவு மருந்து அருந்தாமல் குணமடைந்து விடலாம் என்று நம்பிக்கை வைப்பது வீணான செயலாகும். எனவே, இந்த அளவு தூய்மையை கடைபிடியுங்கள். தக்வாவை பேணுங்கள். அதுதான் இறைவனது கோபத்திலிருந்து காப்பாற்றக் கூடியதாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் அவன் பக்கம் திரும்புபவர்கள் மீது கருணை புரிகின்றான். அவ்வாறு அவன் செய்யாமல் இருந்தால் உலகத்தில் இருள் நிறைந்து விடும்.

அவர்கள் கூறுகிறார்கள்: மனிதன் இறையச்சமுள்ளவனாக ஆகும்போது அல்லாஹ் அவருக்கும் மற்றவர்களுக்கும் இடையில் ஒரு வித்தியாசத்தை வைத்து விடுகின்றான்.

அவர்கள் கூறுகிறார்கள்: நமது ஜமாஅத் பயப்பட வேண்டும். இறைவன் விரும்புவது போன்ற தக்வா ஒருவரிடம் இருந்தால் அவர் காப்பாற்றப்படுவார். இந்த இயக்கத்தை இறைவன் தக்வாவிற்கேற்ப நிலைநாட்டியுள்ளான். தக்வாவின் மைதானம் முற்றிலுமாக காலியாக இருக்கின்றது. (மல்ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 361-363; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நமது வாழ்வில் இன்னொரு ரமலான் வந்திருப்பதும் நீங்கள் இறையச்சமுள்ளவராக ஆகுவதற்காகத்தான் ரமலான் வந்துள்ளது என்று அல்லாஹ் கூறியிருப்பதும் இந்த இயக்கத்தை அல்லாஹ் தக்வாவிற்காகவே நிலைநாட்டியுள்ளான் என்று வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியிருப்பதும் நம் மீது பெரும் பொறுப்புகளை சுமத்துகின்றது. அதாவது எல்லா நேரமும் நாம் நமது நிலைமைகளை ஆய்வு செய்து பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டும். அல்லாஹ் தனது குறிப்பான அருள்களுக்காக வைத்திருக்கின்ற இந்த நாட்களில் நீங்கள் உங்களிடம் எத்தகைய மாற்றங்களை உருவாக்க வேண்டும் என்றால், மேலும் உங்களது தக்வாவின் தரத்தை எந்த அளவுக்கு உயர்த்த நீங்கள் முயற்சி செய்ய வேண்டும் என்றால் அதையே இறைவன் நம்மிடம் விரும்பக்கூடியதாகவும் அது இருக்க வேண்டும். மாறாக, ரமலானில் மட்டுமல்லாமல் இவற்றை உங்களது வாழ்வின் ஒரு பகுதியாக ஆக்கிக் கொள்ளுங்கள். அல்லாஹ் இதற்கான நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக. ஆமீன்.

தொழுகைக்குப் பிறகு நான் ஒருவருக்கு ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பேன். அது காதியானைச் சார்ந்த தர்வேஷ் மதிப்பிற்குரிய காஜா அஹ்மது ஹுஸைன் சாஹிப் உடையதாகும். இவர்கள் மதிப்பிற்குரிய முஹம்மது ஹுஸைன் சாஹிப் அவர்களின் மகனாவார்கள். 31 மே 2017 –ல் தமது 92 –வது வயதில் வஃபாத் ஆகி விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

1926 –ல் காதியானுக்கு அருகிலுள்ள ஸிக்வான் என்ற கிராமத்தில் இவர்கள் பிறந்தார்கள். இவர்களது பாட்டனாரான மியான் இமாதுத்தீன் சாஹிப் அவர்களும் அவர்களது இரு சகோதரர்களான மியான் நிஸாமுத்தீன் சாஹிப் அவர்களும் மியான் கைருத்தீன் சாஹிப் அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஆவார்கள். ஹாஜா அஹ்மது ஹுஸைன் சாஹிப் அவர்களின் குழந்தைப் பருவம் மிகவும் ஏழ்மையில் கழிந்தது. அவர்களுக்கு 9 வயது ஆனபோது அவர்கள் தங்களது குடும்பத்தினருடன் காதியானில் வந்து குடியேறினார்கள். அப்போதிருந்த நிலைமைகளின் காரணமாக அவர்கள் கல்வி கற்க முடியவில்லை. ஆனால் சிறு வயதில் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடம் இருந்தது. சொந்தமாக முயற்சி செய்து திருக்குர்ஆனை படிப்பதற்கு முதலில் காதியானில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கலந்து கொண்ட இறைஞான சபைகளில் இவர்களும் கலந்து கொண்டார்கள். அதன் மூலமாக இவர்கள் தமது அறிவை அதிகமாக வளர்த்துக் கொண்டார்கள். இந்தியா பாகிஸ்தான் பிரிவினையின்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியதற்கிணங்க தமது பெற்றோர்களுடன் ஆலோசனை செய்த பிறகு காதியானிலேயே இருக்க அவர்கள் விரும்பினார்கள். இவ்வாறு எளிமையான வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்தார்கள். தர்வேஷ்களுக்கு வாழ்வை கழிப்பதற்கு கொடுக்கப்படும் அலவன்ஸை கொடுக்க வசதியில்லாத ஒரு காலகட்டமும் ஜமாஅத்திற்கு வந்தது. வசதிகள் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதாக இருந்தது. அப்போது சில தொழில் தெரிந்த அல்லது திறமை பெற்ற தர்வேஷ்களிடம் அவர்கள் வெளியூர்களுக்கு சென்று வேலை தேடிக் கொள்ளுமாறு கூறப்பட்டது. இவர்களுக்கு தையல் வேலை தெரியும் என்பதால் 1953 முதல் 1962 வரை தென் இந்தியாவில் தங்கியிருந்தபோது இவர்கள் சுயமே வேலை செய்து வந்தார்கள். பிறகு மீண்டும் காதியானுக்கு திரும்பி வந்தார்கள்.

பிறகு சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் பல்வேறு அலுவலகங்களில் தொண்டு செய்கின்ற வாய்ப்பு இவர்களுக்கு கிடைத்தது. 1989 –ல் அவர்கள் ஓய்வு பெற்றார்கள். ஜமாஅத்திற்கு தொண்டாற்றியதுடன் காதியானிலுள்ள மஸ்ஜிது முபாரக்கின் நுழைவாயிலுக்கு முன்னால் இவர்கள் தங்களது தையல் கடை ஒன்றை நடத்தி வந்தார்கள். தொழுகைகளை முறையாகப் பேணுபவராகவும், தஹஜ்ஜுத் தொழுபவராகவும், மிகவும் அமைதியாக இருக்கக்கூடிய நல்லொழுக்கமுள்ள மனிதராக இவர்கள் இருந்தார்கள். 2005 –ல் யூ.கே ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் நல்வாய்ப்பும் இவர்களுக்கு கிடைத்தது. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் முதல் ஐந்தாவது கிலாஃபத் வரை நான்கு கிலாஃபத்துகளையும் காண்பதற்கான நற்பாக்கியம் இவர்களுக்கு கிடைத்தது. எப்போதும் தமது பணியை தாமே செய்யும் பழக்கத்தை உடையவராக இவர்கள் இருந்தார்கள். சந்ததிகளுக்கு எப்போதும் அவர்கள் கிலாஃபத்துடன் தொடர்புள்ளவர்களாக இருக்க வேண்டும் என்று அவர்கள் போதனை செய்து வந்தார்கள். அவர்களது உறவினர்களில் ஒருவருடன் இவர்களது முதலாவது திருமணம் நடைபெற்றது. பெண்களை பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்து விட வேண்டும் என்று ஜமாஅத் கட்டளையிட்டதால் இவர்கள் தமது மனைவியை பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்து விட்டார்கள். 1946 –ல் இவர்களது முதலாவது திருமணம் நடந்தது. இந்த மனைவியின் தாயார் அஹ்மதி அல்லாதவராக இருந்ததால் பிறகு இவர்களது உறவு நிலைக்கவில்லை. அவருடன் இருந்த தொடர்பும் முறிந்து விட்டது.

பிறகு 1953 –ல் இவர்கள் இரண்டாவது திருமணம் செய்தார்கள். தென் இந்தியாவின் ஹைதராபாத்தைச் சார்ந்த ஒரு பெண்மணியுடன் இவர்களது திருமணம் நடைபெற்றது. அவர்கள் மூலமாக இவர்களுக்கு நான்கு மகள்களும் ஒரு மகனும் பிறந்தனர். இவர்களது மகனான காஜா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் காதியானிலுள்ள தஃலீமுல் இஸ்லாம் பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியராக இருந்து வருகின்றார்கள். இவர்களது ஒரு மகளான சலீமா கமர் சாஹிபா அவர்கள் Additional Vakeelul Ishaath London ஆக இருக்கின்ற நஸீர் அஹ்மது கமர் சாஹிபின் மனைவி ஆவார்கள். இவ்வாறே இவர்களது இன்னொரு மருமகனான ஹஃபீஸ் அஹ்மது பட்டி சாஹிப் அவர்கள் காதியானில் ஜமாஅத்திற்கு தொண்டாற்றி வருகின்றார்கள்.

இவரது மகள் – நஸீர் அஹ்மது கமர் சாஹிபின் மனைவி இவ்வாறு எழுதுகின்றார்கள்: மர்ஹூம் அவர்கள் எண்ணற்ற சிறப்புகளுக்கு சொந்தக் –காரராக இருந்தார்கள். எளிமையான இயல்பை உடையவராகவும், துஆ செய்து வருபவராகவும், மகிழ்ச்சியுடன் காணப்படுகின்ற, கிலாஃபத்துடன் தன்னை அர்ப்பணிக்கின்ற மனப்பாங்குள்ள மிகவும் சிறந்த மனிதராக அவர்கள் இருந்தார்கள். திருமணமாகி நான் ரப்வா சென்ற நேரத்தில் நான் சிறிது துக்கத்தை உணர்ந்த போது என்னிடம் அவர்கள் நீங்கள் துக்கப்பட வேண்டிய அவசியமேயில்லை. நீங்கள் நற்பேறு பெற்றவர்களாவீர்கள். ஒவ்வொரு ஜுமுஆ நாளன்றும் நீங்கள் காலத்தின் கலீஃபாவின் ஜுமுஆ உரையை நேரடியாக கேட்பீர்கள் என்று கூறினார்கள். எல்லா தொழுகை நேரங்களிலும் பள்ளிவாயிலுக்குச் செல்லும் பழக்கம் இவர்களுக்கு இருந்தது. சில வருடங்களுக்கு முன்னால் பக்கவாதம் ஏற்பட்டதன் காரணமாக இவர்களுக்கு பள்ளிவாயிலுக்குச் செல்ல முடியவில்லை. எப்போதும் அவர்கள் இவ்வாறு துஆ செய்து வந்தார்கள். மக்களிடமும் அல்லாஹ் எனது கால்களுக்கு நான் பள்ளிவாயில் செல்லும் அளவிற்கு சக்தியை வழங்க துஆ செய்யுங்கள் என்று இவர்கள் கூறி வந்தார்கள். எண்ணற்ற சிறப்பம்சங்களின் எஜமானராக இவர்கள் இருந்தார்கள். அல்லாஹ் இவரது தகுதிகளை உயர்த்துவானாக. வறுமை இருந்தும் கூட இவர்கள் தங்கள் மகள்களையும் படிக்க வைத்தார்கள். B.A வரை அவர்களை படிக்க வைத்தார்கள். இவர்களது மகனும் B.Sc., M.Ed. மற்றும் M.A வரை படித்துள்ளார். இப்போது தஃலீமுல் இஸ்லாம் பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியராக இவர்கள் இருக்கின்றார்கள். அல்லாஹ் இவர்களது சந்ததிகளுக்கும் சந்ததிகளின் சந்ததிகளுக்கும் கிலாஃபத்துடன் நன்றியுணர்வுமிக்க தொடர்பை வைத்திருக்கும் நல்வாய்ப்பை வழங்குவானாக. இவர்கள் செய்துள்ள தியாகங்களை இவர்கள் சந்ததிகளும் அடுத்த தலைமுறையும் நினைவில் வைத்தவாறு ஜமாஅத்துடன் நன்றியுணர்வுடன் கூடிய தொடர்பை வைத்திருப்பதற்கான நல்வாய்ப்பை அல்லாஹ் அவர்களுக்கு வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**EDITOR**
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
**SUB EDITOR**
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

**REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785**

*The Weekly* **BADAR** *Qadian*
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 2 Thursday 6 July 2017 Issue No. 27

**MANAGER**
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com
**ANNUAL SUBSCRIPTION** : Rs.300/-

(6 -வது பக்கத்தின் தொடர்ச்சி...)

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நான் ஒரு ஜனஸா தொழுகை நடத்துவேன். **(**ஜனாஸா வந்து விட்டதா**?)** மதிப்பிற்குரிய சவுத்ரி முஹம்மது சுலைமான் அக்தர் அவர்களின் மகன் சவுத்ரி ஹமீது அஹ்மது சாஹிப் உடையதாகும். கடந்த **7, 8** வருடங்களாக இங்குதான் வசித்து வந்தார். மே மாதம் **30** ஆம் தேதி **45** வயதில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வஃபாத் ஆகி விட்டார். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது **(**அலை**)** அவர்களின் சஹாபி சவுத்ரி மவ்லா பக்ஷ் அவர்களின் கொள்ளுப்பேரன் ஆவார். இவர் தனது குடும்பத்துடன் **1990 –**ல் ஜெர்மனி வந்தார். அங்கும் ஜமாஅத்திற்கு தொண்டாற்றுவதில் முக்கிய பங்கு வகித்தார். அங்கு உள்ளூர் தப்லீக் செயலராகவும், மஜ்லிஸின் காயிதாகவும் தொண்டாற்றினார். தேசிய அளவில் உமூரே ஆமா செயலராக தொண்டாற்றும் பாக்கியம் பெற்றார். அடுத்து போஸ்னியா மாநாட்டில் ஜெர்மனியின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார். விளையாட்டில் அதிக ஆர்வம் இருந்தது. தப்லீக் ஸ்டால்களை அதிக ஆர்வத்துடன் நடத்தி வந்தார். எப்போது சந்தர்ப்பம் கிடைத்தாலும் ஸ்டால் போடுவதற்கு தானே சென்று விடுவார். **2009 –**ல் ஜெர்மனியிலிருந்து யூ.கே வந்து விட்டார். இங்கு மண்டல அளவில் அத்ஃபால் நாஸிம் தஃலீமாகவும் தொண்டாற்றினார். மிக நல்ல நிலையை அடைந்தார். அத்ஃபாலை நல்ல நிலைக்கு கொண்டு வந்தார். நான் கூறியது போன்று அவருக்கு தப்லீகிலும் அதிக ஆர்வம் இருந்தது. குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் அன்ஸாருல்லாஹ் அமைப்பிலும் பல்வேறு பொறுப்புகள் வகித்து தொண்டாற்றும் பாக்கியம் பெற்றார். தனிச்செயலர் அலுவலகத்திலும் நிரந்தரமாக தன்னார்வத் தொண்டாற்றும் பணி செய்து வந்தார். நமது கடிதங்களை ஒன்று சேர்ப்பதிலும் முக்கிய தொண்டாற்றினார். காதிம் என்ற முறையில் பாதுகாப்புப் பணியையும் செய்து வந்தார்.

இன்னும் சொல்வதென்றால், அவர் ஜமாஅத் பணிகளைத் தவிர வேறெந்த பணியும் செய்வதே கிடையாது என்று நான் நினைத்தேன். நாள் முழுவதும் பள்ளிவாயிலுக்கு அருகிலேயே இருப்பார். ஆனால் அவர் தனது சொந்த பணியையும் செய்து வந்தார். அதிலிருந்து நேரம் ஒதுக்கி பல மணி நேரங்கள் தனிச்செயலர் அலுவலகத்தில் பணி செய்து வந்தார். அன்னார் வஸிய்யத் செய்தவர் ஆவார். அவருக்கு ஒரு மனைவியும் **4** மகள்களும், **4** மகன்களும் உள்ளனர். அன்னாரின் தந்தையும் இறை அருளால் உயிருடன் உள்ளார். சகோதரர்களும் உள்ளனர்.

அன்னாரின் தந்தை சவுத்ரி முஹம்மது சுலைமான் அக்தர் சாஹிப் கூறுகிறார்: எனது மகன் மிகவும் கட்டுப்பட்டவராக இருந்தார். குழந்தைப் பருவம் முதலே ஜமாஅத் பணிகளில் ஈடுபட்டு வந்தார். எப்போதும் மார்க்கத் தொண்டிற்கான ஆர்வமே அவரது உள்ளத்தில் மிகைத்திருந்தது. தொண்டிற்கான வாய்ப்பு எப்போது கிடைத்தாலும் முழுமையாக அதனை பயன்படுத்திக் கொள்வார். பிள்ளைகளை ஜமாஅத்தான தொழுகைகளில் பள்ளிவாயிலுக்கு அழைத்துச் செல்வார். நோயின் காலகட்டத்திலும் சற்று உடல்நிலை சீரானலும் கூட இதே வழிமுறையைத் தொடர்வார். மிகத் தைரியமாக நோயை இறுதிக் காலகட்டத்தில் எதிர்கொண்டார். மேலும் வீட்டில் இருந்து கொண்டு வக்ஃபே நவ் செயலர் கடமைகளை நிறைவேற்றி வந்தார்.

அன்னாரது மனைவியிடம் இதனையே குறிப்பிட்டுள்ளார்: பிள்ளைகளுடன் நண்பர்களைப் போன்ற தொடர்பு வைத்திருந்தார். அவர்களின் தர்பிய்யத்தைக் கருத்தில் கொண்டார். மேலும் திருமணமாகி **15** வருடங்களில் இன்றுவரை ஒருபோதும் என்னிடம் உரத்த குரலில் பேசியதில்லை.

யூ.கே ஜமாஅத்தின் பொதுச்செயலர் கூறுகிறார்: அஹ்மதிய்யா கிலாஃபத் மற்றும் ஜமாஅத் அமைப்புடனான அன்பில் பைத்தியமாக இருந்தார். எப்போதும் ஜமாஅத் நலனிற்கே முக்கியத்துவம் கொடுப்பார். நோயின் காரணமாக **2, 3** முறையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சற்று உடல்நிலை சரியான உடன் தனது பணிக்குத் திரும்பி விடுவார். சிலமுறை நோயாளி என்ற உணர்வே இல்லாமல் இருந்தது. நோயின் கடைசி கட்டத்தில் என்னால் பள்ளிவாயிலுக்குச் சென்று தொழ முடியவில்லையே என்ற வேதனையே அவருக்கு இருந்தது.

அவரது ஒரு நண்பர் எழுதியுள்ளார்: அவர் எனது டாக்ஸி ஸ்டான்டில் என்னுடன் டாக்ஸி ஓட்டி வந்தார். ஒருமுறை எனக்கு முந்தைய நம்பர் அவருடையதாக இருந்தது. எனது நம்பர் அவருக்குப் பிறகே இருந்தது. தொழுகைக்கான நேரம் வந்ததும் அவர் சென்று விட்டார். நான் ஏதாவது சவாரி கிடைக்கும் என்ற எண்ணத்தில் அங்கு நின்று கொண்டிருந்தேன். ஆனால் நடந்தது என்னவெனில், அவரோ தொழுது விட்டு வந்தார். சவாரியும் அவருக்கே முதலில் கிடைத்தது. அதிலிருந்து எனக்கு பாடம் கிடைத்தது. உலகப் பணிகளை மார்க்கத்திற்காக தியாகம் செய்து விட வேண்டும். தொழுகை கடமையாகும். அதற்கே முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற படிப்பினையை நான் பெற்றுக் கொண்டேன். இவ்வாறு மர்ஹூம் தமது நண்பர்களுக்கு மறைமுகமான முறையில் தர்பிய்யத் வழங்கக் கூடியவராகவும் திகழ்ந்தார். எல்லாருக்கும் உதவி செய்வது அன்னாரது சிறப்பு குணமாகும். இரவு **2** மணிக்கு வேலை இருந்தாலும் நான் செய்து தருகிறேன் என்று கூறுவார் என அவரது நண்பர்கள் கூறுகின்றனர்.

மவ்லானா அதாவுல் முஜீப் ராஷித் சாஹிப் கூறுகிறார்கள்: தப்லீக் ஸ்டால் நடத்துவதற்கு தொடர்ச்சியாக செல்வார். மிக புன்னகையுடன் சிரித்த முகத்துடன் அனைவருக்கும் ஸலாம் கூறி இணைந்து பணியாற்றி வந்தார். நான் அவரைப் பற்றி அவரது நண்பரிடம் விசாரித்தேன். அதற்கு அவரது நண்பர் கூறினார். இன்று அவரது உடல்நலம் நன்றாக இருந்தது. எனவே தப்லீக் செய்ய சென்று விட்டார் எனக் கூறினார்.

அல்லாஹ் அன்னாரது அந்தஸ்தை உணர்த்துவானாக. அன்னாருக்கு கருணையையும் பாவமன்னிப்பையும் வழங்குவானாக. அன்னாரது பிள்ளைகளையும் நல்லடியார்களாக அல்லாஹ் ஆக்குவானாக. கிலாஃபத்துடன் எப்போதும் தொடர்புடையவர்களாக வைப்பானாக. நான் கூறியது போன்று இது ஹாஸிர் ஜனாஸாவாகும். நான் வெளியில் சென்று தொழுகை நடத்துவேன். நீங்கள் பள்ளிவாயிலில் ஸஃப்பில் நில்லுங்கள்.

★ ★ ★ ★ ★

---

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

*ஆனால் எவர் இறைவனது வெளிப்பாடு தன் மீது இறங்காதிருக்கையில் அவ்வாறு இறங்கியதாக அவ்விறைவன் மீது அவமரியாதையாக பொய் பேசுவாரோ அல்லது தான் இறைவனோடு உரையாடாமலிருக்கையில் அவனோடு உரையாடக் கூடிய பாக்கியம் தனக்குக் கிடைத்ததாக இட்டுக் கட்டிக் கூறுவாரோ அவர் நிச்சயமாக அழித்தொழிக்கப்படுவார் என்பதை அவ்விறைவனையும் அவனது மலக்குகளாகிய வானவர்களையும் சாட்சியாக வைத்துக் கூறுகிறேன். ஏனெனில் அவன் தன்னைப் படைத்த இறைவன் மீது பொய்யாக இட்டுக்கட்டி கூறியுள்ளான். அவனை வஞ்சித்துள்ளான். மேலும் கொடிய எல்லை மீறலையும் இறுமாப்பையும் மேற்கொண்டுள்ளான். ஆகவே இந்த நிலைக்கு நீங்கள் அஞ்சுங்கள். பொய்யான வெற்றுக் கனவுகளை உண்டுபண்ணக் கூடியவர்கள் மீதும் இறைவனோடு உரையாடுவதாகப் பொய்யான வாதம் செய்பவர்கள் மீதும் இறைவனது சாபம் உண்டாகும். இது எவ்வாறென்றால் இறைவனே இல்லை என்று அவர்கள் தங்களது உள்ளத்தில் நினைப்பது போன்றதாகும். ஆனால் அவர்கள் இறைவனது கடும் தண்டனைக்கு ஆளாவார்கள். மேலும் அவர்களது தீய நாட்கள் அவர்களை விட்டும் அகன்று போகாது. ஆகவே நீங்கள் உண்மையிலும் நேர்மையிலும் தக்வா என்னும் இறையச்சத்திலும் நிலை நின்று இறைவனை நேசிப்பதில் முன்னேறுங்கள். உங்களது உயிர் இருக்கும்வரை இதனையே உங்களது பணியாக கருதுங்கள். இதன்பின் உங்களில் யாரை இறைவன் விரும்புவானோ அவரை தன் உரையாடலின் அருளுக்கும் ஆளாக்குவான். இதன் மீது உங்களுக்கு எவ்வித விருப்பமும் இருக்கக் கூடாது. ஏனெனில் மன இச்சையின் காரணத்தால் ஷய்த்தானின் தொடர்பானது உங்களுக்கு வரத் தொடங்கி விடக் கூடும். இதனால் பலர் அழிந்து விடுகிறார்கள். ஆகவே நீங்கள் இறை தொண்டு செய்வதிலும் இறைவனை வணங்குவதிலும் மிக்க ஈடுபாடு கொண்டிருங்கள். நீங்கள் இறைவனது எல்லாக் கட்டளைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதிலும், உறுதி நம்பிக்கையில் முன்னேற்றத்தை விரும்ப வேண்டும் என்பதிலும் உங்களின் முழு முயற்சியும் இருக்க வேண்டும். முயற்சியை இறைவெளிப்பாட்டைக் காட்டுவதற்காக மேற்கொள்ளக் கூடாது; இரட்சிப்பைப் பெறுவதற்காக இருக்கக் கூடாது.*

*(கிஷ்தி நூஹ். ரூஹானீ கஸாயின் தொகுதி **19** பக்கம் **25-28**)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad